Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 24 சனிக்கிழமை (06.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 170

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## சீனியின் விலை திடீர் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் முதல முறையாக ஒரு கிலோ சீனியின் விலை 150 ரூபாயைக் கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிகச் சிறிய காலப் 15

### 150 ரூபாயால்
## சீமெந்தின் விலை அதிகரிக்கக்கூடும்

(கொழும்பு)

சீமெந்து மீதான வரியை அதிகரிக்கும் அரசின் தீர்மானத்தால் சீமெந்துப் பை ஒன்றின் விலை 150 ரூபாயால் அதிகரிக்கக்கூடும் என்று பாவனையாளர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. 15

## ஊரடங்கு
### இன்று முதல் இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை மட்டுமே

(கொழும்பு)

இன்று சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்கு உத்தரவு மீளவும் பின்னிரவு 11 மணிக்கு நடைமுறைப் படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இன்று ஜூன் 6ஆம் திகதி தொடக்கம் மறுஅறிவித்தல் 15

## திருநெல்வேலியில் கெரோயினுடன் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

200 மில்லிகிராம் கெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்று வெள்ளிக்கிழமை கோப்பாய்ப் பொலிஸாரால் கைது 15

## பெண் அலுவலகர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழிலுள்ள சுதேச மருத்துவ உற்பத்தி நிலையத்தில் கடமையாற்றிய பெண் அலுவலர் ஒருவர் அலுவலகத்தில் கடமையில் இருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதில் கோப்பாய் 15

### இராணுவ மயமாக்கலினால்
# பொதுத் தேர்தலுக்கு ஆபத்து ஏற்படலாம்
### சட்டத்தரணி லால் விஜேநாயக்க சந்தேகம்



(கொழும்பு)

நாட்டில் இராணுவ மயமாக்கல் இடம்பெற்று வருகின்ற நிலையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மக்கள் அச்சுறுத்தப்படலாம் என்கிற அச்சநிலை ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக, சட்ட நிபுணரும் ஜே.வி.பியின் தேசிய மக்கள் சக்தியின் கீழ் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுபவருமான சட்டத்தரணி லால் விஜேநாயக்க சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

**கொரோனா வைரஸ்** பாதிப்பு **1801** புதிய தொற்றாளர்கள் **04** பலி **11**

### உலகளாவிய ரீதியில்
## கொரோனா பலி 4 இலட்சமாகின்றது

(ஜெனிவா)

உலகம் முழுவதிலும் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண் 15

### எதிர்வரும் 3 மாதத்துக்கு
## 1,043 பில்லியன் ரூபாய் அரச செலவுக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 150 ஆவது சரத்தின் பிரகாரம், ஜனாதிபதி விடுத்துள்ள உத்தரவிற்கு அமைய, அமைச்சுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி அடங்கிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிரூபத்தை நிதி அமைச்சின் செய 15

## ரயில் சேவைக்கான ஆசன முற்பதிவுகள் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

சகல அலுவலக தொடருந்து சேவைகள், இரவுநேர தபால் தொடருந்து சேவை மற்றும் தூர இடங்களுக்கான தொடருந்து சேவை 15

### மாற்றுக் கொள்கைக்கான நிறுவகம்
## ஜனாதிபதி செயலணிக்கு அதிருப்தி வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதி செயலணிகள் இரண்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வாரத்தில் அமைத்தமை குறித்து மாற்றுக் கொள்கைக்கான நிறு 15

## கொரோனா சந்தேகத்தில் 5 ஆயிரம் பேரை கண்காணிக்கின்றோம்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா சந்தேகத்தின் பேரில் 5 ஆயிரம் பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தி கண்காணிக்கப்படுவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

45 தனிமைப்படுத்தல் நிலையங்களில் இவர்கள் கண்காணிக்கப்படுவதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

இதுவரை 11,709 15



### காணாமல் ஆக்கப்பட்டிருந்த
## மகனைத் தேடி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தந்தையொருவர்
### மரத்திலிருந்து வீழ்ந்து மரணம்

(வவுனியா)

வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தந்தையொருவர் நேற்றுக் காலை மரணமடைந்துள்ளார்.

வவுனியா கூமாங் 15

### பொதுப் போக்குவரத்து சேவையில்
## முகக் கவசம் அணிந்து பயணிப்பது கட்டாயம்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அனைத்துப் போக்குவரத்துச் சேவைகளும் வழமைக்கு திரும்பவுள்ள நிலையில் சகல பயணிகளும் முகக் கவசம் அணிய வேண்டும் என போக்குவரத்து அமைச்சு அறி 15



# வவுனியா நோக்கிப் பயணித்த குடும்பஸ்தரை காணவில்லை

## மனைவி பொலிஸில் முறைப்பாடு

(வவுனியா)

மல்லாவி பகுதியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய பாலசுந்தரராஜா பிரபாகரன் என்பவரைக் காணவில்லை என அவரின் மனைவி மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் பாலிநகர் வவுனிக்குளம் பகுதியில் வசித்து வரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான பிரபா என அழைக்கப்படும் பாலசுந்தரராஜா பிரபாகரன் என்ற வர்த்தகர் கடந்த புதன் கிழமை 3ஆம் திகதி மல்லாவியிலிருந்து வவ்னியாவிற்கு செல்வதாக தெரிவித்து சென்ற நிலையில் இது வரையில் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து, அவரின் மனைவியினால் அவரைக் காணவில்லை எனத் தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தகர் இறுதியாக வெள்ளை நிறத்தில் கறுப்பு நிறபுள்ளி இடப்பட்ட மேலாடையும் கறுப்பு நிற ஜீன்ஸ்சும் அணிந்திருந்தார் என அவரின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார்.

இவரை யாரேனும் கண்டால் 076 - 6602122, 077 - 8027498, 077 - 8860893 என்ற தொலைபேசிகள் இலக்கத்திற்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ தகவல் வழங்குமாறு அவரின் மனைவி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3,250)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19 - 11 - 1933



மறைவு 19 - 05 - 2019

### அமரர் கிருஷ்ணபிள்ளை சின்னம்மா

வாழ்வில் ஏற்றமும் இறக்கமும் கண்டீர் அம்மா - எம்
வளமான வாழ்விற்காய் உமை உருக்கினீர்கள் அம்மா!
பண்பாய் பாசமாய் எமை வளர்த்தே - பல
கலைகளையும் பயில வைத்தீர்கள் அம்மா!
பேரக்குழந்தைகளின் ஏற்றங்களைக் கண்டு
மகிழ்ந்தீர்கள் அம்மா! ஆனாலும்
உங்கள் இளவல்களின் நினைவுடனேயே
எமை விட்டுப் பிரிந்தீர்கள் அம்மா!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாலையடி, புற்றளை,
புலோலி.

(C-9672)

- குடும்பத்தினர்

## அரச பண்ணைகளுக்கே கறவை மாடுகள் - பந்துல

(கொழும்பு)

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ள 2 ஆயிரத்து 500 கறவை மாடுகள் அரச பண்ணைகளுக்கு மட்டுமே வழங்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கறவை மாடுகள் இனப்பெருக்கம் செய்யும் நோக்கத்துடனேயே நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளது என அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, இவ்வாறு நாட்டிற்கு மீண்டும் கறவை மாடுகளை கொண்டு வரும் திட்டம் செயற்படுத்தப்படுமானால் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் என இலங்கை அரச கால்நடை வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

### எதிர்வரும் ஜூலை மாதம் முதல்

## பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கையின் பிரகாரம் எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் பேருந்துக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பிலான யோச்னை ஒன்றை அரசாங்கத்திடம் முன்வைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாளை மறுதினம் குறித்த யோசனை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், பேருந்துக் கட்டணத்தை 1.5 சதவீதமாக அதிகரிப்பது தொடர்பில் யோசனை முன் வைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு ஆண்டின் நடுப்பகுதியில் பேருந்துக் கட்டணங்களை மாற்றியமைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய பேருந்துக் கட்டணமானது ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக 25 சதவீத பயணிகளுக்கு நன்மை பயக்கும் வகையிலேயே அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார். (ம-3,8)

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால்

## மசகு எண்ணெய் உற்பத்தியை இலங்கையில் மேற்கொள்ளத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முதன் முறையாக மசகு எண்ணெய் உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

நாட்டில் வருடத்திற்கு 65 ஆயிரம் கிலோ லீற்றருக்கும் அதிகளவு மசகு எண்ணெய் நுகர்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

இருப்பினும், நாட்டுக்கு மசகு எண்ணையினை இறக்குமதி செய்வதனால் அதிக அளவிலான அந்நிய செலாவணி நாட்டை விட்டு வெளியில் செல்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்னதாக நாட்டில் மசகு எண்ணெய் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்த போதும்பல்வேறு காரணங்களால் அது ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில், மசகு எண்ணெய் உற்பத்தி தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர கவனம் செலுத்தியுள்ளார்.

இதற்கமைய, அதிநவீன உபகரணங்களைப் பயன்படுத்தி ஆண்டுக்கு 33 மில்லியன் கிலோ எடை கொண்ட மசகு எண்ணெயை உற்பத்தி செய்ய முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் CEYPETCO எனும் பெயரில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மசகு எண்ணெய் உற்பத்தியை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம-3,8)

## மரண அறிவித்தல்

மண்ணில் 22 - 09 - 1960



விண்ணில் 02 - 06 - 2020

### ஐயாத்துரை சபாநாதன்

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சபாநாதன் அவர்கள் 02.06.2020 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், திருநாவுக்கரசு - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கௌசலாவின் (சாந்தி) ஆருயிர்க் கணவரும், கபிசன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருவாசகநாதர் (ஓய்வு நிலை ஆசிரியர்), வைத்திலிங்கம் (ஜேர்மனி), இந்திராணி, பவானி, சிவபாலன் (முன்னாள் ஆசிரியர், கனடா), குருச்சந்திரநாதன் (ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்), முத்துப்பிள்ளை (சுவிஸ்), மங்கையற்கரசி (சுவிஸ்), வாகீஸ்வரி (பிரான்ஸ்), இராஜகோபால் (கனடா), கதிரவேற்பிள்ளை (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விமலாதேவி, இந்திராதேவி (ஜேர்மனி), முத்துலிங்கம், காலஞ்சென்ற அருளானந்தசிவம் மற்றும் வத்சலா (கனடா), பரிமளாதேவி (ஆசிரியை), குணபாலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற சத்தியேஸ்வரன் (சுவிஸ்) மற்றும் மோகனகுமார் (பிரான்ஸ்), ஹேமாவதி (கனடா), மகேஸ்வரி (லண்டன்), கண்ணன் (லண்டன்), ரவி (கனடா), மோகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.06.2020) சனிக்கிழமை **Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham, ON L3R5G1, Canada)** இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெறும். அன்றையதினம் நயினாதீவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் மாலை 4.00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம் பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(C-9670)

தகவல் : குடும்பத்தினர்.
ஐ.திருவாசகநாதர் - 076 079 9263


## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற

**இரத்தினசாமி** அவர்கள்

ஜாதகம், கைரேகை, எண்கணிதம்

திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்புகொள்ளவும்.

முன்பதிவுக்கு: 071 5748358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, Jaffna. (யாழ் நீதிமன்றத்திற்கு அருகில்)

(2956)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி
புஸ்பதனராஜன் கௌசலை
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்

### கந்தையா சிவசம்பு

கடந்த புதன்கிழமை 03.06.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

(C-9673)

# பல்கலைக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையை இருமடங்காக அதிகரிக்க புதியதிட்டம் தயார்

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

**பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை 30 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரமாக உயர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் அமைச்சரவைத் தீர்மானங்களைத் தெரிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இதுவரை பல்கலைக்கழகங்களுக்கு 30 ஆயிரம் மாணவர்களே இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம் நிறைவடையும் காலத்திற்குள் குறித்த 30 ஆயிரத்தை 60 ஆயிரமாக அதிகரிக்கும் இலக்கை நோக்கிய பயணம் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கென இலவசக்கல்வியை உள்ளடக்கிய தேசிய பல்கலைக்கழகங்கள் நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறைந்தது ஒன்றாவது நிர்மாணிக்கப்படும். விசேடமாக தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.


புதிதாக 10 பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதற்கான கடன் ஒப்பந்தத்தை மேலும் நீடித்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# பயிர்களில் வெட்டுக்கிளிகளின் தாக்கம் காணப்படின் 1920ஐ அழைக்கவும்

(கொழும்பு)

நாட்டில் பயிர்களை தாக்கும் வெட்டுக்கிளிகள் காணப்படும் பகுதிகள் குறித்து தகவல்களை வழங்குமாறு விவசாயத் திணைக்களம் பொதுமக்களிடம்கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்காக 1920 என்ற உடனடி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இது தொடர்பான தகவல்களை தெரிவிக்க முடியும் என்று



விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எம்.டபிள்யூ. எம். வீரக்கோன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறியத்தரும் தகவல்களுக்கு அமைவாக அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இதேவேளை இந்த வெட்டுக்கிளிகளின் தாக்கம் குறித்து விவசாயிகள் அவதானமாக இருக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பயிர்ச் செய்கைகளில் அல்லது விவசாய நிலங்களில் இவ் விடயம் தொடர்பில் ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் அது தொடர்பில் அறியத்தர முடியும்.

1920 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது 077 302 8270 எனும் கைத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவிக்க முடியும் என விவசாயத்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எம்.டபிள்யூ. எம். வீரக்கோன் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

**முருகையா முகுந்தராஜ் (முகுந்தன்)**



திதி: ரேவதை

மண்ணில் 12.07.1986

விண்ணில் 19.05.2019

ஒரு வருடம் ஒரு யுகமாய் மாறுகிறது
உன் ஒருவனின் பிரிவால்
துயர் ஆற்ற முடியவில்லை
ஆருயிர் மகனே உன் அகால மரணத்தால்

கண்ணெதிரே கண்டோம் இன்று
கண்ணை மூடி நினைக்கின்றோம்
கண்ணிருந்தும் கடவுள் உன்னைக் காண
வரம் கொடுக்கவில்லையே!

எத்தனை இன்பம் உன்னுடன்
கண்டு கழித்து இன்று
அத்தனை இன்பத்தையும் நினைவுகளாகவே
நினைக்க வைத்துவிட்டது காலம்

காலம் கடந்தாலும் உன் நினைவுகள்
நெஞ்சை உருக்கி விழி வழியே
கண்ணீராய் சிந்தச் செய்கிறது

ஆற்பெரும் துயர் தந்து
நீ பிரிந்து சென்று ஓராண்டு ஆகியும்
உன் ஒவ்வொரு அசைவும்
எம்முடன் இருக்குமென
மனச்சாந்தி கொண்டு உன் ஆத்மாவிற்கு
மலர்ச்சாந்தி செலுத்துகின்றோம்

(C-9669)

இல.30,பரியாரியார் வீதி,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்

## 9ம் ஆண்டு நினைவலைகள்

அமரர்.

**இரத்தினம் இதயராசா**



தோற்றம் 27 . 06 . 1983

மறைவு 16 . 05 . 2011

திதி.வைகாசி
பூர்வபக்க சதுர்த்தசி

பாடுபட்ட வினையெல்லாம் பாடிாச்சு
காடுதனில் பொழிந்த நிலவாச்சு
வீடு வரும் நினைவுடனே
தேடும் கண்களில் கனவாச்சு
கொடுமை தருவது தானோ இறுதிவரமாச்சு

(2924)

மானாவளவு,
கரணவாய், கரவெட்டி.

குடும்பத்தினர்

# வடமாகாணத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பித்தலுக்கான முன்மொழிவுகளும் ஆயத்த நடவடிக்கைகளும்

(யாழ்ப்பாணம்)

**வட மாகாணத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்குரிய யோசனைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலே மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசினால் அறிவிக்கப்படும் திகதியில் இருந்து பின்வரும் கட்டங்களாக கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

*முதலாம் கட்டம் - பாடசாலைகளைத் தயார்படுத்தலும் துப்புரவு செய்தலும் (01 வாரம்)*

அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலைச் சமூகத்தினரின் பங்கேற்புடன் கைகழுவும் நிலையம், நீர் வசதிகளை ஏற்படுத்தல், டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக துப்புரவு பணிகள், சிரமதானம் மேற்கொள்ளல்.

அத்துடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் புதிய நேர சூசிகள் தயாரிப்பு, பாடங்களை நடத்துதல் தொடர்பாக ஆசிரியர்களுடன் ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ளல், சமூக இடைவெளியைப் பேணக்கூடியவாறு ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் இருக்கத்தக்கவாறு ஏற்பாடு செய்தலும் அதிக எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களைப் பிரித்து இருவேளை பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் திட்டமிடலை மேற் கொள்ளலும்.

*இரண்டாம் கட்டம் தரம் 10, 11, 12, 13 வகுப்புக்களை ஆரம்பித்தல் (02 வாரங்கள்)*

தரம் 10, 11, 12, 13 வகுப்புக்களை ஆரம்பித்தலும் நாளொன்றுக்கு தரம் 10, 11 இற்கு மூன்று மணித்தியாலங்களும் தரம் 12, 13 இற்கு 4.30 மணித்தியாலங்களும் பாடங்கள் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*மூன்றாம் கட்டம் - தரம் 5, 6, 7, 8, 9 என்பவற்றை ஆரம்பித்தல் (01 வாரம்)*

தரம் 5, 6, 7, 8, 9 வகுப்புக்களை ஆரம்பித்து தரம் 5 இற்கு நாளொன்றுக்கு மூன்று மணித்தியாலங்களும் தரம் 6 தொடக்கம் 11 வரை 4 மணித்தியாலங்களும் தரம் 12, 13 இற்கு 4.30 மணித்தியாலங்களும் பாடசாலைகளை நடத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

*நான்காம் கட்டம் - நிலைமைகளை அனுசரித்து பாடசாலையின் சகல நடவடிக்கைகளையும் வழமையான நிலைக்குக் கொண்டுவருதல்.*

தற்போதைய நிலைமைகளுக்கு ஏற்றவாறாகவும் கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமையவும் மாணவர் வரவு, ஆசிரியர் வரவு மற்றும் வழமையான நேரசூசி அமுலாக்கம் என்பவற்றை நியம நிலைக்குக் கொண்டு வருவதுடன் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் அதன் பிரகாரம் தொடர்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் கை கழுவும் நிலையம் மற்றும் நீர் வசதிகளை ஏற்படுத்துதல் ஒத்துழைப்புக்காக வட மாகாணத்தின் 35 கல்விக் கோட்டங்களிலும் தலா ஒவ்வொரு பாடசாலை வீதம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களின் மொத்தம் 75 பாடசாலைகளுக்கு சிறுவர் பாதுகாப்பு அமைப்பும் மற்றும் கிளிநொச்சியின் 12 பாடசாலைகளுக்கு கொய்கா (KOICA) செயற்றிட்டத்தின் கீழ் OFERR நிறுவனமும் முன்வந்துள்ளன.எ-

கொவிட் -19 பரவல் நிலைமைகளை எதிர்கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட வசதிகள் பாடசாலைகளில் போதுமானவை அல்ல என்பதுடன் இவற்றை ஏற்படுத்துவதற்கு வழங்கப்படும் விசேட உதவிகளும் போதுமானவை அல்ல.

எனவே இது தொடர்பில் பாடசாலைகளில் சுகாதார பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் முதலான சகல சமூக நிறுவனங்களும் தமது பிரதேசத்-தில் உள்ள பாடசாலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# 2021 தரம் 1 மாணவர்களுக்கான அனுமதி

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

(யாழ்ப்பாணம்)

யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை 2021 முதலாம் தர மாணவர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பில் கல்லூரி அதிபர் என்.மகேந்திரராஜா அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தரம்-1 அனுமதி தொடர்பான கீழே தரப்பட்டுள்ள இணையத்தள முகவரியிலிருந்து விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்ய முடியும் என்றும் (https:/ / moe.gov.lk/web/images/ news/2020/grade01/admission 2020/2020adt.pdf) ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு தகைமைபெறின் வெவ்வேறாக விண்ணப்பிக்கமுடியும் என்றும் தரவிறக்கம் செய்த விண்ணப்பப்படிவங்களை அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் பின்பற்றி அதன்படி பூர்த்தி செய்து 2020 ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்றும் கடித உறையின் இடது மேல் மூலையில் தரம்-1 விண்ணப்பம் 2021 எனக் குறிப்பிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

(யாழ்ப்பாணம்)

யா/புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம் 2021 முதலாம் தரம் மாணவர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அது தொடர்பில் கல்லூரி அதிபர் அருட்சகோதரி எம். அஞ்சலிக்கா அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தரம்1 அனுமதி தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள இணையத்தள முகவரியிலிருந்து விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்ய முடியும் என்றும் (http://moe.gov.lk/web/images/news/2020/grade01/admission2020/2020adt.pdf) ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்கு தகைமைபெறின் வெவ்வேறாக விண்ணப்பிக்க முடியும் என்றும் தரவிறக்கம் செய்த விண்ணப்பப்படிவங்களை அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் பின்பற்றி அதன் படி பூர்த்தி செய்து 2020 ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வாறு பதிவுத் தபாலில் அதிபர், யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற பாடசாலை முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் என்றும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தரம்-விண்ணப்பம் 2021 எனக் குறிப்பிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இலங்கை மத்திய வங்கியின் தமிழ்மொழிமூல இணைய விரிவுரை

(கொழும்பு)

"இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை-2019 இல் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதாரத்தின் நிலை" எனும் தலைப்பிலான தமிழ் மொழிமூல இணைய விரிவுரையை இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் zoom செயலி ஊடாக எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இதற்கான பேச்சாளராக இலங்கை மத்திய வங்கி, பொருளாதார ஆராய்ச்சி திணைக்கள பிரதிப்பணிப்பாளர் முனைவர் (திருமதி ) சுஜிதா ஜெகஜீவன் பங்கேற்கவுள்ளார்.

ஆர்வம் உடையோர் https://zoom.us/webinar/register/WN J2rredsLTsahDbMNNE990A எனும்இணைப்பின் ஊடாக பதிவு செய்வதன் மூலமாகவோ அல்லது இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ முகநூல் பக்க நேரலை ஊடகவோ (face book .com/cbsrilanka) இவ் விரிவுரையில் கலந்து கொள்ள முடியும் என்பதுடன் சந்தேகங்கள் மற்றும் வினாக்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ குழுமத்தினால் பதில்களும் வழங்கப்படவுள்ளன.

மேலதிக வழிகாட்டல்களுக்கு 011 247 7840 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது dilrukshi@cbsl.lk எனும் மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளலாம். (2-5)

# கலைமாணி பட்டதாரி மாணவர்களுக்கு இணையவழிக் கற்கைகள் ஆரம்பம்

(சுண்டுக்குளி)

2017/2018 கல்வியாண்டில் கல்வி கற்கும் அனைத்து கலைமாணி பட்டதாரி மாணவர்களுக்குமான விரிவுரைகளை ஒன்லைன் மூலம் ஆரம்பிப்பதற்கான திகதிகள் கலைப்பீட சபையால் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

அந்தவகையில் நான்காம் வருட முதலாம் அரையாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வருடம் 1 நிலை 2 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும் நேருக்கு நேரான தொடர்பாடல் வகுப்புக்கள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட முதலாம் பருவ பரீட்சைகள் பற்றிய அறிவித்தல்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றதும் அறியத்தரப்படுமென கலைப்பீடாதிபதி கலாநிதி கே. சுதாகர் அறிவித்துள்ளார். (ஜ-4-22)

# மரண அறிவித்தல்

## திரு.அலெக்ஸ்சாண்டர் பேரின்பநாதன்



யாழ். பலாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வதிவிட மாகவும் கொண்ட அலெக்ஸ்சாண்டர் பேரின்பநாதன் அவர்கள் 03.06.2020 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அலெக்ஸ்சாண்டர்- ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சவரிமுத்து- குணகுந்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மோட்சலங்காரம் (சிந்தாமணி) அவர்களின் பாசமிகு கணவரும், விமலா (ஜேர்மனி), மஞ்சு (இலங்கை), நேசன் (சுவிஸ்), றூபன் (கனடா), காலஞ்சென்றவர்களான றுக்சன், நிக்சன் மற்றும் நிசான் (லண்டன்), சிந்து (லண்டன்), சுகன்யா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்டோரியாப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, குணசீலியம்மா, பாக்கியநாதர், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், றங்கன், லீனஸ், ஜெய்சி, யூயினி, கிளைற்றன், அன்ரன், கொலின்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சில்வியா, எமில்சன், யான்சன், குயின், லிபான், டில்மன், அலோசன், அயெக்ஸ், அகான்சா, மிலெக்சி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 06.06.2020 சனிக்கிழமை இன்று மதியம் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பலாலி ஆரோக்கிய மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பலாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2ஆம் குறுக்குத் தெரு,
தெனி ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

மஞ்சு-மகள் - 0768163279, சுகன்யா-மகள்-0772063961,
மருமகன்-லீனஸ்-0779581056

(2954)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் திரு.
**முத்துலிங்கம் தங்கராசா**



தோற்றம்
1950.12.19

மறைவு
2020.05.07

கடந்த 07.05.2020 வியாழக்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் திரு.முத்துலிங்கம் தங்கராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.06.2020 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 06.06.2020 இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.24, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

0776590399,
0772229638

குடும்பத்தினர்

(2951)

# மரண அறிவித்தல்

## அமரர்.பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை



தோற்றம்:- 1944.06.13
மறைவு:- 2020.06.02

பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தென்மூலையை வசிப் பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தெய்வானைப் பிள்ளை அவர்கள் கடந்த 02.06.2020 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான சிதம்பரப் பிள்ளை-இளையபிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான ஆச்சிப்பிள்ளை, செல்லம் மற்றும் தங்கம்மா, ராசம்மா, செல்லையா ஆகியோரின் அன்பு சகோதரியும், யோகராசா, முருகராசா, தேவராசா, ஜெயக்குமார் (லண்டன்), சுபாசினி (பிரான்ஸ்), சேனாதிராசா (லண்டன்), சுகந்தினி தேவி, மனோகராசா (லண்டன்), சுகந்தாதேவி (லண்டன்), திலீப்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தினி, யோகராணி, காலஞ்சென்ற மனோரம்மா, ஜெயந்தா, தவராசா, மங்களமதி, கனகராசா, அனுரா, முருகேஸ்வரன், 'றம்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், றஜிந்தன், நிறோஜா, நர்மதா, நிறைஞ்சினி, லக்சன், லக்சிகா, லடேசன், சுரேகா, டர்சிகா, அஜின், கிசாந்தன், கிருசாந்தன் லகீனா, பிரசாந், சஜீபன், சஜீதா, சதுஸ்கா, சபிதன், டசானா, சகானா, யக்ஷிகா, தேஷிகன், அஸ்வீன், வாகிஷா, வர்ஷா, பவிஸ் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும், தேனுஜாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.06.2020 நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(2950)

தொடர்புகளுக்கு:

சங்கானை வீதி,
அச்சுவேலி.

077 159 5314,
077 200 2426

தகவல்:
குடும்பத்தினர்

## இராசிபலன்

06.06.2020
வைகாசி 24, சனிக்கிழமை
பிரதமை பின்னிரவு 12.07 மணிவரை
கேட்டை பிற்பகல் 4.42 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சந்திராஷ்டமம்- பரணி,கார்த்திகை வளவன்


மேஷம்

குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, விட்டுக் கொடுத்து செல்வதால் மேன்மையடைவீர்கள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.


ரிஷபம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், கடன் தொல்லைகள் குறையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மிதுனம்

உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு,நன்மைகள் நடைபெறும் நாள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


சிம்மம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெண்கள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும்,தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், எப்படி நடக்கு மென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும்.


துலாம்

புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.


விருச்சிகம்

உறவினர் பகை அகலும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், கற்பனை மிகுதியான நாள்.


தனுசு

உடல் நலனில் சிறு சிறு இடையூறுகள் ஏற்படலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு,கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.


மகரம்

வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்,இலாபகரமான நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெண்கள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் இடம் பெறலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.


மீனம்

தடைகள் விலகி தனவரவு கிடைக்கலாம், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பம் அகலும், உடல் நலன் சீராகும், பயணங்களால் பலனுண்டு.

சந்திப்புக்களும், பிரிவுகளும் நிறைந்ததே வாழ்க்கை.

# வெட்டுக்கிளிகள் தொடர்பில் அச்சம் வேண்டாம்



## வட மாகாண விவசாயத் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

**பாலைவன வெட்டுக்கிளிகள் தொடர்பில் விவசாயிகள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என வட மாகாண விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

வடக்கு மாகாணத்திலும் பாலைவன வெட்டுக்கிளிகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்ற செய்தியை அடுத்து வடமாகாண விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு வலம்புரி கேட்ட போதே குறித்த திணைக் களத்தின் உத்தியோகத்தர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நாட்களில் குருநாகலில் மாவத்தகம, யாழ்ப்பாணத்தில் குப்பிழான் ஆகிய இடங்களில் வெட்டுக்கிளிகளின் தாக்கம் காணப்பட்டமை தொடர்பில் விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்ட போது,

குறித்த பகுதிகளில் இனங் காணப்பட்ட வெட்டுக்கிளிகள் இலங்கைக்கே உரித்தானவை என்றும், அவை பாலைவன வெட்டுக்கிளிகள் அல்ல என்றும் பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கையைப் பாதிக்கும் சாத்தியம் மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது என்றும் தெரிவித்தனர்.

விவசாய நிலங்களில் சாதாரண வெட்டுக்கிளிகளை அவதானித்தால் அவற்றை கைகளால் பிடித்து அழிக்கலாம் அல்லது மைனா போன்ற பறவைகளுக்கு இயற்கையாகவே அவை உணவாகும்.

எனினும் வெட்டுக்கிளிகளை கூட்டமாக அவதானித்தால், கிருமிநாசினி போன்ற பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தி அழிப்பது சிறந்தது.

அவ்வாறில்லாதுவிடின் உடனடியாக அருகிலுள்ள விவசாயத் திணைக்களத்தை நாடுமாறு வட மாகாண விவசாயத் திணைக்களம் மேலும் தெரி வித்துள்ளது. (ஜ-8)

# ஊரடங்கை மீறிய இளைஞர்கள் கைதாகி பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நாவற்குழிப் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 10 இளைஞர்களை சாவகச்சேரி பொலிஸார் பிணையில் விடுவித்தனர்.

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில் நாவற்குழி பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் விளையாடிக்கொண்டு இருந்தபோதே குறித்த இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 10 இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இளைஞர்களை கடுமையாக எச்சரித்து, பொலிஸ் பிணையில் விடுவித்தனர். குறித்த இளைஞர்களை பொலிஸார் கைது செய்ய முற்பட்ட போது அப்பகுதியில் சிறிய பதற்ற நிலை தோன்றியதாகவும், எனினும் விசாரணையின் பின்னர் குறித்த இளைஞர்கள் விடுவிக்கப்படுவார்கள் என பொலிஸார் உறுதி அளித்ததை அடுத்து பதற்றம் தணிந்தது. (2-5-8)

# நீதிமன்ற அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை அரச பொது விடுமுறை தினமாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டமையால் அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் மேல் தள நீதிமன்றத்தில் (MC-1) நடைபெறவிருந்த குடியியல் வழக்குகள் யாவும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமையும் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் கீழ்த் தள நீதிமன்றத்தில் (MC-2) நடைபெறவிருந்த குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் யாவும் எதிர்வரும் ஜுலை மாதம் 16 ஆம் திகதி வியாழக் கிழமையும் நடைபெறும் என மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (2-5)

# சட்டவிரோத மதுபான விற்பனை இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

விடுமுறை மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த பெண் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 65 வயதுடைய பெண் ஒருவரும், 180 மில்லி லீற்றர் அளவுடைய 90 மதுபான போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 35 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-2-5)

## 32 வருடகால ஆசிரிய சேவையாற்றி ஓய்வுபெறும் நாளில்
# மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




ஆசிரியர் பணியைத் திறம்பட ஆற்றி
ஓய்வுபெறும் ஆசிரியை
திருமதி **ஜெலா மேபிள் பரமநாயகம்**
[B.A. (Hons) Geo, P.G.D.E, M.Edu.SLTS-I]
அவர்களின் மணிவிழா நாளில் பிறந்தநாள்
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஓய்வுக்காலம்
சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்தித்து
வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| வ/ பிறமண்டு வித்தியாலயம் | -14.12.1987-25.05.1994- ஆசிரியர் |
| | 19.11.1989-25.05.1994- பிரதி அதிபர் |
| வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி | -26.05.1994-05.05.1996 |
| வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | -06.05.1996-05.05.2011 |
| யா/ சன்மார்க்க ம.வி. | -06.05.2011-07.11.2012 |
| யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | -08.11.2012 தொடக்கம் இன்றுவரை |

"வாழ்க வளமுடன் என வாழ்த்துவோர்"

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

(2940)





தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியின் மாவட்ட அலுவலகம் கடந்த 3 ஆம் திகதி புதன்கிழமை திருநெல்வேலி நகர மையத்தில் திறந்து வைக்கப்பட்டது. கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அலுவலகத்தைத் திறந்து வைத்தார். யாழ்.மாவட்ட வேட்பாளர் தவச்செல்வம் சிற்பரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: 13 செவ் 6 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி. நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/7094

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: - செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7096

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: - சூரி, செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. நிரந்தர உத்தியோகம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7101

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 39 செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில் BBA, உதவி முகாமையாளர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரியாக இருக்க வேண்டும். வைத்தியர் ஆசிரியர் தவிர்ந்த வேறு உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/7112

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: - செவ் 1 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு சம்பந்தம் விரும்பத்தக்கது.
தொ.இ: G/8009

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 54 செவ் 8 இல்
உயரம்: 4'11"
தகைமை/தொழில் க.பொ.த.உ/த. கணக்காளர்.
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/8020

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: - செவ் 10 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: பட்டதாரி.
எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது அரச உத்தியோகம்.
தொ.இ: G/8027

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: - செவ் 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bachelor of Bussiness Administration. Assistant Registrar.
எதிர்பார்ப்பு: Accountant, Engineer.
தொ.இ: G/8057

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# ஜனாதிபதியின் கையொப்பத்துடன் போலி ஆவணம் தயாரித்தவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் கையொப்பத்துடனான போலி ஆவணத்தை தயாரித்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நாளை மறுதினம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அரச வங்கியொன்றில் பணிநீக்கம் செய்யப்பட்ட குருநாகல் - யந்தம்பலாவ பகுதியைச் சேர்ந்த 37 வயதான பணியாளர் ஒருவர் ஜனாதிபதியின் கையொப்பம் மற்றும் கடிதத் தலைப்புகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கடிதம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# 3 இலட்சம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளுடன் மூன்று பேர் கைது



(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு வேளையில் ஆயிரத்து 360 போதை மாத்திரைகளுடன் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த மூன்று பேர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

பேருவளை-அம்பேபிடிய பாலத்திற்கு அருகில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

பிரதான சந்தேக நபர் போதைப் பொருள் வர்த்தகர் என்றும் ஏனைய இருவரும் போதைப் பொருள் விற்பனையாளர்கள் என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளின் மொத்த பெறுமதி 3 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் விடயம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-8)


## முதியோர் பராமரிப்பு

வெகு விரைவில் யாழ்.நகர எல்லைக்குள் ஆரம்பிக்கவிருக்கும் முதியோர் இல்லத்திற்கு சேர விரும்புபவர்கள் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

தொடர்பு:- 0779789210 (2941)

## மணமக்கள் தேவை

1988 MBBS Dr.மணமகளுக்கு 1993 இல் பிறந்த ஜேர்மன் மணமகளுக்கு, 1983 கனடாவில் வசிக்கும் மணமகளுக்கும் படித்த பட்டதாரி மணமகன்மார், 1981 சூரியன், செவ்வாய் பாவமற்ற கனடா மணமகனுக்கு மணமகள், இலங்கையிலுள்ள மணமக்களுக்கு இலங்கையிலேயே மண மக்கள் தேவை.

0764752219, 0762049298, 0770237639 (2911)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—207

# உலக சூழல் தினமும் விவசாயமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

220

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஜூன் 5 ஆம் திகதியான நேற்றைய தினம் கொண்டாடப்பட்ட உலக சுற்றாடல் தினம் மகிழ்ச்சியை அதிகளவில் அள்ளித் தெளித்திருக்கின்றது. கடந்த வருடம் பூமி வரண்டிருந்தது. இருப்பினும் அது போலல்லாது இம்முறை ஆங்காங்கே சிறுபோகத்து மழையாக இல்லாது எதிர்பார்த்த அளவிற்கு பெய்யவில்லை. சுற்றுச்சூழல் குளிர்வதற்குப் பதிலாக உஷ்ணமாகவே காணப்படுகின்றது. குளங்கள் குட்டைகளில் நீர் இல்லாதிருப்பினும் கிடைத்த நீரைப் பயன்படுத்தி நுளம்புப் பெருக்கம் அதிகளவிலானதாக உணரப்படுகின்றது. சுற்றுச்சூழல் மாற்றமடைந்திருக்கின்றது. சூழல் சுத்தமாகியிருக்கின்றது. கொரோனாவின் தாக்கத்தினால் இது உணரப்பட்டிருக்கின்றதை ஆராய்ந்திருக்கின்றார்கள்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




கொரோனா ஊரடங்கினால் விவசாயப் பெருமக்கள் தமது விளைபொருட்களை தகுந்த விலைக்கு விற்க முடியாமல் அவதிப்பட்டதை நாமறிவோம். ஊரடங்கில் அவரவர் வீட்டிலேயே அடங்கியதால்அறுவடை செய்ய விளை பொருட்களை எடுத்துச் செல்ல முடியாமல் இருந்ததால் அடுத்த முறை போகத்திற்கு விவசாயச் செய்கையை தொடர்வதற்கு அவர்களிடம் பணபலம் அதிகமிருக்காது. இது இவ்வாறாயிருப்பினும் சுற்றுச்சூழலில் கொரோனாவினால் பல நன்மைகள் நடந்தேறியிருக்கின்றன. மனிதர்களின் நடமாட்டம் திடீரென முடக்கப்பட்டதால் சுற்றுச்சூழலில் மாசுக்கள் குறைந்திருக்கின்றதனை நாமறிவோம். விமானப் பயணங்கள் நிறுத்தப்பட்டன. வாகனங்கள் அசைவற்றிருந்தன. மனிதர்களின் நடமாட்டம் முழுவதுமாக தடைப்பட்டது. உயிரினங்கள் பலதெருவுக்குள் இறங்கி வீட்டுக்குள்ளிருந்த அனைவரையும் அதிசயமாக பார்த்தகாட்சிகளும் உண்டு. தொழிற்சாலைகள் அசைவற்று இருந்தமையினால் சூழல் குளிர்ந்தது. இந்த மாற்றத்தை உலக மக்கள் அனைவரும் முதன்முதலாக உணரத் தலைப்பட்டனர். இது இயற்கையின் விபரீதத்தில் ஒன்று எனக் கூறலாம்.

தற்போதைய வடபகுதி பயிர்ச்செய்கை இன்னும் அசேதன இரசாயனத்தை நம்பியதாகவே இருக்கின்றது. நம் நாட்டு விவசாயம் திசைமாறி அசேதன இரசாயனங்களின் பயன்பாட்டிற்குள் மூழ்கி விட்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டு விவசாயப் பெருமக்களின் பயிர்ச் செய்கையில் அன்றாட பயன்பாட்டு பொருளாக விவசாயத்திற்கான முதலீடுகளில் அசேதன நச்சுப் பொருட்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இதுபற்றிய கரிசனை பலரிடமும் பல மட்டங்களிலும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அவசியம் எதிர்கொள்ள வேண்டிய விடயமாகவும் அதற்கான தீர்வினை எட்டுவதற்கான வழிமுறைகளையும் நாமே கண்டுபிடிக்க வேண்டும். அசேதன இரசாயனங்களில் பசளைகள், பீடைநாசினிகள் மற்றும் பூப்பதைத் தூண்டும் ஓமோன்கள், தாவர வளர்ச்சி ஊக்கிகள், கனிய வைத்தல் எனப் பலவகைப்பட்டன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினது பக்க விளைவுகள் பற்றி ஆய்வறிக்கைகள் தெரிவித்தாலும் அவற்றினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றி இன்னும் ஐயப்பாடுகள் இருக்கவே செய்கின்றன. தீங்கற்றதென கூறப்பட்ட இரசாயனங்களினால் ஏற்படும் பின்விளைவுகள் பின்நாட்களில் பாரதூரமானதாக இருப்பதை காலங்கடந்து அறியமுடிகின்றது. இது ஒருபக்கமிருக்க பயன்படுத்தப்படும் நச்சு இரசாயனங்களால் ஏற்படும் தாக்கங்கள் மனிதனிலும் சூழலிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதாலும் அவற்றிலிருந்து மீளவேண்டிய அவசியத்தை உணர்ந்ததாலும் அசேதன இரசாயனங்களுக்குப் பதிலாக மாற்று முறைகளை பரிந்துரைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாமனைவரும் உள்ளோம். விவசாயப் பெருமக்களும் இந்த விளைவுகளைப் பற்றி அறிந்து சிந்தித்து பயன்படுத்தும் அசேதன இரசாயனங்களின் அளவை கணிசமான அளவிற்கு குறைக்க ஒத்துழைக்க வேண்டும். பரிந்துரைப்பவர்களுக்கும் பயன்படுத்துபவருக்குமான புரிந்துணர்வு இங்கே எய்தப்படல் வேண்டும் என்பதோடு மாற்று வழிகளுக்கான நஞ்சற்ற முறைகளை விவசாயப் பெருமக்கள் இலகுவாக பெறுவதற்கும் ஆவன செய்ய வேண்டும்.

மாற்று வழிகளில் பலவற்றை பரிந்துரைக்கலாம். உயிர்ப்பசளைகள், உயிர்கொல்லிகள் (பூச்சி மற்றும் பூஞ்சண கொல்லிகள், களை கொல்லிகள்) மற்றும் இரைகௌவிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் நுண்ணங்கிகள் எனபல வகைகளுண்டு. இவற்றைப்பற்றி ஆய்வுகளும் நிறையவே செய்யப்பட்டிருந்தாலும் எமது பிரதேசத்திற்கு உகந்ததான அங்கிகளை இனங்கண்டு அவற்றை இனம்பெருக்கி விவசாய பெருமக்கள் இலகுவாகவும் மலிவாகவும் பெற ஆவன செய்தல் வேண்டும். இன்னும் இவ்வகையான நுண்ணங்கிகள், அங்கிகள் பற்றிய ஆய்வுகள் முடுக்கிவிடப்படல் வேண்டும். இவற்றை பயன்படுத்தும் போது அசேதன பசளைகளின் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றம், பயிர் விளைச்சலில் ஏற்படுத்தும் மாற்றம், குறிப்பாக சூழலில் ஏற்படுத்தும் மாற்றம் என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இவற்றுக்காக இத்துறை சார்ந்த மாணவர்களை பயிற்றுவிக்கவும் வேண்டும். இவ்வாறானவற்றை பயன்படுத்தும் போது அவற்றினது தரம் நிர்ணயஞ் செய்யப்பட வேண்டியதுடன் அதனைத் தொடர்ந்தும் கண்காணிப்பதற்கு உரிய வழிவகைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் இயற்கையுணவைத் தேடி உலகமே அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றது. கொரோனா வந்தது இப்படியென்றால் இனி வரப்போகும் ஆபத்துக்களை உலகம் எப்படி தாங்கப்போகின்றது. கொரோனா வைரஸினால் பல ஆயிரம் மக்கள் இறந்து போனார்கள். இது நல்லதொரு பாடமாக அனைவருக்கும் இனிவரும் காலத்தில் இயற்கையை அனுசரித்து வாழ வழி சொல்லப்பட்டிருக்கின்றது. பொருளாதாரம் திடீரென ஒரு கண்ணுக்குத் தெரியாத நுண்ணங்கியால் முடங்கிப் போயிருக்கின்றது.

விவசாயத்தில் அசேதன இரசாயன பசளைகளைப் போல உயிர்ப்பசளைகள் விரைந்து தொழிற்படமாட்டாதவை. அதனால் பயிர்களில் உயிர்ப்பசளைகளின் தாக்கம் உடனடியாகத் தெரிவதில்லை. இது விவசாயப் பெருமக்களிடையே உயிர்ப்பசளைகளினை பயன்படுத்துவதில் தற்காலிக பின்னடைவை தோற்றுவிக்கும். ஆனால் அசேதன இரசாயன பசளைகளைப் போலன்றி உயிர் பசளைகளும் நுண்ணங்கிகளும்நின்று பெருகி மண்ணுக்கு வளஞ்சேர்ப்பனவாகும். காலப்போக்கில் உயிர்ப் பசளைகளினது தாக்கம் மண்ணிலும் பயிரிலும் உணரப்படும்.

உயிர்ப்பசளைகளை பயன்படுத்துவது விளைநிலத்திற்கும் பயிருக்கும் நல்லது. அதனால் சூழல் வளப்படும். இயற்கையுடனான விவசாயத்திற்கான திறவுகோலாக அது அமையும். எமது சூழல் தொகுதி தனித்துவமானது. அத்துடன் அந்நிய தேசத்திலிருந்து நுண்ணங்கிகளை வரவழைக்காமல் எமது பகுதியில் உள்ள வளமான அங்கிகளைப் பிரித்தெடுத்து அவற்றை இனங்கண்டு அவற்றினது பீடை கட்டுப்படுத்தும் ஆற்றல் அல்லது தாவரத்திற்கேற்ற பசளைப் பெறுமானத்தை ஈடுகட்டும் வழிவகைகளை அறிதல் வேண்டும். உயிர்ப்பசளைகள் தாவரத்திற்கு எதுவித தீங்கையும் ஏற்படுத்தாது. மேலும் இவ்வாறான அங்கிகள் இங்குள்ள சூழலில் அதிகமாக பெறக்கூடியதாக இருப்பதனால் இங்கும் அவை பல்வேறு தாக்கத்திற்கு உட்பட்டிருக்க வாய்ப்புண்டு. அத்துடன் உயிர்ப்பசளைகளை கழிவுப்பொருட்களிலிருந்து உற்பத்தி செய்தால் சாலையோரம் தேங்கிக்கிடக்கும் குப்பைகளுக்கு "குட்பை" சொல்ல கிடைக்கும் வாய்ப்பின் மூலம் கழிவகற்றல் திட்டம் நிறைவுபெறும். வீட்டில் சேரும் தாவரக்கழிவுகளை முறையாக மீள்சுழற்சி செய்து அவற்றை இயற்கையுரமாக பயன்படுத்துவது விரிவாக்கப்படல் வேண்டும். நாம் இந்த இடர்காலத்தில் கற்றுக்கொண்டவை ஏராளம். அவற்றை அலசியாராய்ந்து இயற்கை வழி விவசாயத்திற்கு எம்மை நாம் மாற்றிக் கொள்ளாது விட்டால் இந்த அனுபவமும் வீணாகப் போய்விடும்.

இன்றைய காலகட்டத்தில் உயிர் பசளைகளை உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகூட வசதி பாரியளவில் தேவைப்படுகின்றது. இவ்வாறான உயிர் பசளைகளை உற்பத்தி செய்வதில் தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்வரவேண்டியது அவசியமாகும். ஆய்வுகள் பல இவ்வாறான உயிர்ப்பசளைகளை உற்பத்தி செய்வதிலும் அவற்றினது பயன்பாடு, பாதிப்பு இன்னும் அவற்றினால் சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் அனைத்துமே கண்காணிக்கப்படுவதுடன் மேலும் அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தும் வழிகளையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும். அனைத்திற்கும் மேலாக விவசாயப் பெருமக்களை இவ் உயிர்ப்பசளைகளை பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டும். விவசாயப் பெருமக்களிடையே மனமாற்றத்தை கொண்டு வருவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் பலவழிகளிலும் நாம் முயற்சி செய்ய வேண்டும். விவசாயப் பெருமக்களை அசேதன இரசாயனப் பாவனையிலிருந்து விடுவித்து சேதன விவசாயத்தை செய்ய ஊக்குவிப்பதுடன் அவர்களுக்கான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

இந்த மாற்றத்தை எமக்கான மாற்றமாக கொண்டு இயற்கை வழி விவசாயத்தை மேலும் முன்னெடுக்கலாம். உற்பத்தியாளர்கள் அனைவரையும் பாதுகாக்கின்ற அதே நேரத்தில் அவர்களின் உணவுற்பத்திக்கான வழிவகைகளையும் குறிப்பாக சந்தைப்படுத்தலையும் முறையாக ஏற்படுத்திக் கொடுத்தால் எமது விவசாயத்தைக் காப்பாற்றுகின்ற அதேநேரத்தில் எமது வளங்களையும் நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.




# ஸ்ரீ கிருஷ்ணர் ஊதிய சங்கு!

"சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்து விட்டான்'' என்று நாம் பல சந்தர்ப்பங்களில் சொல்வதுண்டு.

அமைதியாக இருக்கும் ஒரு விடயத்தில் தேவையில்லாமல் தலையிட்டு விவகாரத்தை உண்டு பண்ணுகிறார்கள். பாருங்கள்...அவர்களுக்கு இந்த உதாரணம் பொருந்தும்.

ஆனால் அந்தப் பழமொழி உண்டான விதம் எப்படி என்பதைப் பற்றி பெரியவர் ஒருவர் சொன்னார்.

அவர் மகாபாரதத்திலிருந்து சில நிகழ்ச்சிகளைக் கூறி விட்டு பின்வருமாறு கூறினார்.

ஸ்ரீ கிருஷ்ணன் மீது எப்போதும் ஐந்து பொருட்கள் இருக்கும்.

அவை என்னென்ன?

சங்கு, சக்கரம், வில், வாள், கதை ஆகிய ஐந்தும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் இருக்கும்.

பக்தியுடன் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்ப்பவர்களுக்கு இவையெல்லாம் ஆபரணங்களாகத் தெரியும்.

எதிரிகளுக்கு இதெல்லாம் ஆயுதங்களாகத் தெரியும்!

சக்கரம், வில், வாள், கதை இதெல்லாம் ''ஆயுதங்கள்'' என்று சொன்னால் சரி...ஒப்புக் கொள்ளலாம்.

சங்கு - இருக்கிறதே அது எப்படி ஆயுதமாகும்?

இப்படித்தான் துரியோதனன் நினைத்தான்...ஏமாந்து போனான் என்பது அந்தப் பெரியவரின் கருத்து.

கண்ணபிரானுடைய உதவி வேண்டும் என்பதற்காக அர்ஜுனனும் துவாரகைக்குப் போனான். துரியோதனனும் துவாரகைக்குப் போனான்.

அவர்களிடம் "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று ஸ்ரீ கிருஷ்ணன் கேட்கிறார்.

அவர்கள் இருவரும் தனித் தனியாக ''வர இருக்கும் போரில் நீங்கள் எங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்!'' என்று கேட்கிறார்கள்.

அதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் என்ன சொல்கிறார்?

"தர்மனுக்கு உதவி செய்வதாக முன்பே நான் வாக்குக் கொடுத்து விட்டேன்...!'' என்றார். துரியோதனன் பார்க்கிறான்...

"சரி...அப்படியானால் நீங்கள் ஏன் ஆயுதங்கள் எடுத்து போர் செய்யக் கூடாது" என்று வேண்டிக் கொண்டான்.

ஸ்ரீ கிருஷ்ணன் யோசித்தார். "சரி" என்று ஒப்புக்கொண்டார்.

இதைக் கேட்டதும் துரியோதனன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனிடம் என்ன கேட்டான் தெரியுமா?

"நீங்கள் எனக்கு சாரதியாக இருக்க வேண்டும்!'' என்று கேட்டுக்கொண்டான்.

அதற்கு "சரி" என்று மகிழ்ச்சியுடன் ஸ்ரீ கிருஷ்ணன் ஒப்புக் கொண்டார்.

ஏனென்றால் தேரை ஓட்டும் சாரதிக்குத்தான் எஜமானனுடைய வெற்றியை அறிவிப்பதற்காக அடிக்கடி சங்கு ஊதும் உரிமை உண்டு!

ஸ்ரீ கிருஷ்ணனுடைய "பாஞ்சஜன்யம்" என்ற சங்குக்கு எவ்வளவு பலம் உண்டு என்ற விடயம் துரியோதனனுக்கு முதலில் தெரியவில்லை. மகாபாரதப் போர் நடக்கும்போது தான் அதன் சக்தி எப்படிப்பட்டது என்பதை அவன் புரிந்து கொண்டான்.


போர் நடக்கும் சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் சங்கு ஊதிய போதெல்லாம் ஆயிரக்கணக்கான கௌரவ வீரர்கள் எப்படி மடிந்தார்கள் என்பதை துரியோதனன் நேரில் பார்த்தான்.

அதன் பிறகுதான் அவன் யோசித்தான்,

"ஸ்ரீ கிருஷ்ணனுடைய சங்கும் ஓர் ஆயுதமாகிவிட்டதே! அவன் சும்மா இருக்கிற சங்கை ஊதிக்கெடுக்கிறானே!" என்று துரியோதனன் உணர்ந்தான்.

இந்த அடிப்படையில்தான், "சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான்!'' என்ற பழமொழி உருவாயிற்று என்று அந்தப் பெரியவர் கூறினார்.

## வரைந்து பழகுவோம்




## விடுகதைகளும் விடைகளும்

- யானை படுக்க இடமுண்டு, கடுகு மடிக்க இலையில்லை.
  **சவுக்குமரம்**
- கையில்லாமல் நீந்துவான். கால் இல்லாமல் ஓடுவான்.
  **படகு**
- முயல் புகாத காடு என்ன காடு?
  **முக்காடு**
- ஒளியில் தொடர்வான் இருளில் மறைவான்.
  **நிழல்**
- தலை போனால் மறைக்கும். இடை போனால் குரைக்கும். கால் போனால் குதிக்கும் மூன்றும் ஒன்று சேர்ந்தால் முந்தி ஓட்டம் பிடிக்கும்.
  **குதிரை**
- அனலிலே பிறப்பாள். ஆகாயத்தில் பறப்பாள்.
  **புகை**
- கன்னங்கரிய அரங்கத்தில் வெள்ளைப்பந்து விளையாடும்.
  **கரும்பலகையும் வெண்கட்டியும்**
- கல்லும் கரடும். முள்ளும் முரடும். வேரும் விறகும்.
  **கற்கண்டு, பலாப்பழம், கரும்பு**

# இன்று தபாலகங்கள் திறக்கப்படமாட்டாது

(கொழும்பு)

தவிர்க்க முடியாத காரணங்களால் இன்று 6 ஆம் திகதி சனிக்கிழமை நாடு முழுவதிலுமுள்ள தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்கள் சேவைகளுக்காக திறக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசேட அறிவித்தல் மூலம் தபால்மா அதிபர் இதனைத் தெரிவித்தார். இதனால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# குளவிகள் கொட்டியதில் 10 பேர் வைத்தியசாலையில்

(கொட்டகலை)

தோட்டத்தொழிற்றுறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதினால் 10 பேர் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொட்டகலை பொரஸ்கிறிக் தோட்டத்தில் தேயிலைத் தோட்டத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே, நேற்று முன்தினம் வியாழக்கிழமை இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். குறித்த 10



பேரும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஜ-4)

# நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு தலா 6 இலட்சம் ரூபாய் இழப்பீடு

## பந்துல தகவல்

(கொழும்பு)

நிதி நிறுவனத்தின் வைப்பாளர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தலா 6 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், மத்திய வங்கியினால் இந்த விடயம் தொடர்பாக பிரதமருக்கு அறிவிக்கப்பட்டதற்கு அமைய 97 வீதமான வைப்பாளர்களின் பிரச்சினை முழுமையாக தீர்த்து வைக்கப்படவுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்தத் தொகையை விட அதிக நிதியை வைப்பிலிட்ட 3 வீதமானவர்கள் உள்ளதாகவும் அவர்களின் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கான இயலுமை தற்போது இல்லை எனவும் அவர்களுக்கான தீர்வும் விரைவில் வழங்கப்படும் எனவும் பந்துல குணவர்த்தன இதன்போது தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, இ.ரி.ஐ.நிறுவனத்தில் வைப்பிலிட்டவர்களுக்கான நிதியை மீளச் செலுத்துவதற்கான நடவடிக்கை இந்த செயற்றிட்டத்தில் உள்வாங்கப் படவில்லை என மத்திய வங்கி அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதில் வைப்பிலிட்டவர்களுக்கு தலா 6 இலட்சம் ரூபா கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர், அதில் வைப்பிலிட்டவர்களின் சங்கம் நீதிமன்றத்தை நாடியுள்ளதாகவும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் அதில் தலையீடு செய்ய




முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படும் எந்தவொரு நிதி நிறுவனத்திலும் அதிகபட்சமாக 6 இலட்சம் ரூபாய் மாத்திரமே வைப்பிலிடுவதற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளதாகவும் இதனால், நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்பிலிடுவோர் தங்களின் பாதுகாப்பிற்கான விடயங்களை அறிந்துகொள்வதோடு, அதிகபட்சம் 6 இலட்சம் ரூபாய் வரை மாத்திரமே வைப்பிலிட முடியும் என்பதை அனைத்து வைப்பாளர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)


# வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் முன்வைத்த கோரிக்கையை ஏற்று வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வவுனியா மாவட்டத்திற்கான பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்காக கடந்த 2016 ஆம் ஆண்டு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் 291 மில்லியன் நிதியை ஒதுக்கி அன்றைய அமைச்சரவை அனுமதி அளித்தது.

ஆனாலும் அதன் அமைவிடம் தொடர்பில் அன்றைய வவுனியா மாவட்ட அரசியல் தரப்பினரிடையே காணப்பட்ட இழுபறி நிலை காரணமாக குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட போதும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்கப்படவில்லை.




இந்நிலையில் பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பதற்கான அனுமதியை வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு குறித்த மாவட்ட வர்த்தகர்களும் பொதுநலன்விரும்பிகளும் கொண்டுசென்றிருந்த நிலையில் நேற்று முன்தினம் அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த விடயத்தை கோரிக்கையாக முன்வைத்திருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# குடமுருட்டி பாலத்தின் பாகங்கள் திருட்டு; பிரதான சந்தேக நபர் உட்பட மூவர் கைது

(அக்கராயன்)

கிளிநொச்சி பரந்தன் வீதியில் அமைந்துள்ள குடமுருட்டி பாலத்தின் இரும்புகள் கடந்த மாதம் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த கிளிநொச்சி பொலிஸார், இரும்புத் தொழிலகம் ஒன்றில் பாலத்தின் பாகங்கள் அறுக்கப்பட்ட நிலையில் கண்டுபிடித்தனர்.

அத்தோடு பாலத்தின் மற்றொரு தொகுதி பாகங்கள் கிளிநொச்சி வேறொரு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப் பாகங்களின் பெறுமதி 10 தொடக்கம் 15 மில்லியன் வரையாகும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் இரும்புக் கடை ஒன்றின் முதலாளி உட்பட மூவர் கைது செய்யப்பட்டு பொதுச் சொத்துக்களை கையகப்படுத்தினா் என்ற குற்றத்தின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த சந்திரசேகர தெரிவித்தார்.

இதேவேளை குறித்த பாலம் தற்போது விபத்துக்கள் ஏற்படும் நிலையில் உள்ளதாகவும் அதிகாரிகள் உடன் பாலத்தை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5-350)

# மன்னார் திருக்கேதீஸ்வர கும்பாபிஷேகம் பிற்போடல்

(மன்னார்)

பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார்திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் கும்பாபிஷேக திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறாது என திருக்கேதீஸ்வர திருத்தல திருப்பணிச் சபை அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள "கொரோனா" வைரஸ் தொற்று காரணமாக அமுலில் உள்ள ஊரடங்கு சட்டத்தால் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக திருவிழா அன்றைய தினம் நடைபெறாது.

மீண்டும் கும்பாபிஷேகம் நடத்துவது தொடர்பான விபரங்களும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும் என திருப்பணிச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (2-285)

# வீடு புகுந்து வயோதிபர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரத்தில் வசிக்கும் முதியவர் ஒருவரின் வீட்டிற்கு கடந்த வியாழக்கிழமை இரவு நுழைந்த 7 பேர் கொண்ட இனந்தெரியாத குழுவொன்று அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தியதுடன் வயோதிபரையும் தாக்கியுள்ளது.

இதன்போது வயோதிபரை குறித்த வீட்டில் வசிக்கக்கூடாது என எச்சரித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்து சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அப்பகுதியில் இருந்து கத்தி, வாள் மற்றும் கூரிய ஆயுதங்களையும் மீட்டுள்ளனர். (2-5-8-316)



"பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு தருமபுரம் பொலிஸாரின் ஏற்பாட்டில் தருமபுரம் வைத்தியசாலையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கின்சிலி ஜேரத் தலைமையில் இரத்ததான முகாம் நடைபெற்றது. இம்முகாமில் கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் டி.ஐ.ஜீ.சம்பத்குமார, எஸ்.எஸ்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: தருமபுரம் செய்தியாளர்)

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள லொயலாஸ் மண்டபத்தில் மாபெரும் இரத்ததான முகாம் இடம் பெறும்.

நாளைய தினம் ஊரடங்கு சட்டம் அமுலில் இருப்பின் குருதிக் கொடையாளர்கள் இரத்த வங்கி பதிவு புத்தகத்தை வீதி பாஸ் அனுமதியாக பயன்படுத்த முடியும் எனவும் தூர இடங்களை சேர்ந்த குருதிக் கொடையாளர்கள் 077 661 6484 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டுபோக்குவரத்து வசதியை பெற்றுக் கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-5-30)

# அஞ்சல் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

(பனிக்கன்குளம்)

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புக்காக இம்முறை சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் சுகாதார சேவை பணிக் குழுவினர்களுக்கான அஞ்சல் மூலவாக்களிப்புக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதார சேவை பணிக் குழுவினருக்கு 2020 பாராளுமன்ற தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் சுகாதார சேவை பணிக்குழுவை சேர்ந்த ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

குறித்த விண்ணப்பங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பன பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊடாக ஏற்கனவே அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-5-281)



# சுதந்திரத்திற்குப் பின்
## இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

09

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

பாராளுமன்றத் தேர்தல் 1977

| | வேட்பாளர்கள் | | | |
|---|---|---|---|---|
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| ஐக்கிய தேசிய கட்சி | 154 | 140 | 3,179,221 | 50.92% |
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி | 23 | 18 | 421,488 | 6.75% |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | 147 | 8 | 1,855,331 | 29.72% |
| இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் | 2 | 1 | 62,707 | 1.00% |
| லங்கா சமசமாஜகட்சி | 82 | 0 | 225,317 | 3.61% |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 25 | 0 | 123,856 | 1.98% |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 27 | 0 | 22,639 | 0.36% |
| சுயேட்சை | 295 | 1 | 353,014 | 5.65% |
| மொத்தம் | 755 | 168 | 6,243,573 | |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தேச விமுக்தி ஜனதா கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை மகாசன பக்சய ஆகிய கட்சிகள் மக்கள் கூட்டணி என்ற பெயரில் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. ஐக்கிய் தேசியக் கட்சியுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சேர்ந்து போட்டியிட்டது. ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம்(EROS), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT). தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஆகியவை சேர்ந்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF) என்ற கட்சியில் போட்டியிட்டன. மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி என்ற கட்சியிலும் போட்டியிட்டன. இதைவிட வேறு பல கட்சிகளும் போட்டியிட்டன.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2000

2000 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 11ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2000, ஒக்டோபர் 8 இல் இடம்பெற்றது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 10ஆவது பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்தார்.

ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான மக்கள் கூட்டணி அரசு மீது இம்முறை இரு முனைகளில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஈழப்போரில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் பல முனைகளில் தோல்வி, பொருளாதாரத்தில் மந்த நிலை ஆகியவையே அவையாகும். பல வன் முறைகளின் மத்தியில் தேர்தல்கள் இடம்பெற்றன.

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்முறைகளில் 70 பேர் வரை கொல்லப்பட்டனர். இவர்களில் ஆறு பேர் தேர்தல் நாளன்று கொல்லப்பட்டனர். எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தேர்தல் முறைகேடுகளுக்கு ஆளும் கட்சியைக் குற்றம் சாட்டின. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடந்த தேர்தல்களைப் போலவே இம்முறையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே தேர்தல்களில் வாக்களித்தனர்.

சந்திரிகா பண் டாரநாயக்கவின் ஆளும் கூட்டணி வெற்றியைத் தக்கவைத்துக் கொண்டது. ஆனாலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் 2001 இல் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்க்கட்சித்தலைவராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். அநுர பண்டாரநாயக்க சபாநாயகர் பதவிக்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தேச விமுக்தி மக்கள் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, ஸ்ரீலங்கா மகாஜன பக்சய ஆகியவை ஒன்று சேர்ந்து மக்கள் கூட்டணியில் (PA) போட்டியிட்டன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குருநாகல், நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மக்கள் கூட்டணியில் (PA) இணைந்து போட்டியிட்டது, ஏனைய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மக்கள் கூட்டணியிலும், ஏனைய மாவட்டங்களில் முஸ்லிம் தேசிய ஐக்கியக் கூட்டமைப்பிலும் போட்டியிட்டது. ஜனநாயக மக்கள் முன்னணி, தேசியத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டன.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 2001

2001 இலங்கை பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் 12ஆவது பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2001, டிசெம்பர் 6 இல் இடம்பெற்றது. 11ஆவது பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்று ஓராண்டுக்குள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதனைக் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்தார்.

மக்கள் கூட்டணி அரசில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகியதை அடுத்து அரசு பெரும்பான்மையை இழந்தது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மக்கள் விடுதலை முன்னணியைக் கூட்டணியுடன் சேர்க்க முயன்றார். இதனை விரும்பாத 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் இணைந்தனர். அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர எதிர்க்கட்சிகள் முயன்றன. இதனைத் தவிர்க்கும் முகமாக சந்திரிகா பண்டாரநாயக்க அரசைக் கலைத்து புதிய தேர்தலுக்கான தேதியை அறிவித்தார். தேர்தல் காலத்தில் மொத்தம் 1,300 தேர்தல் வன்முறை முறைப்பாடுகள் பதியப்பட்டன. தேர்தல் வன்முறைகளில் 60 பேர் கொல்லப்பட்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவை ஒன்று சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னணியை உருவாக்கினர். ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தனித்தும், ஏனையவற்றில் ஐக்கிய தேசிய முன்னணியிலும் போட்டியிட்டது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தேச விமுக்தி மக்கள் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, முஸ்லிம் தேசிய ஐக்கிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா மகாஜன பக்சய சேர்ந்து மக்கள் கூட்டணியில் (PA) போட்டியிட்டனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்; ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரிலும், சின்னத்திலும் போட்டியிட்டது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியில் போட்டியிட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆளும் மக்கள் கூட்டணி தேர்தலில் தோல்வியடைந்தது. எதிர்க்கட்சிக் கூட்டணியான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு கட்சியைச் சார்ந்திருந்ததால் அரசு பல முறை ஆட்டம் கண்டது.

2003 ஒக்டோபரில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டில் அரசரகால நிலையைப் பிறப்பித்து அமைச்சரவையில் மூன்று முக்கிய அமைச்சர் பதவிகளைத் தம்வசப் படுத்தியதை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விக்கிரமசிங்க மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பதாக குமாரதுங்க குற்றம் சாட்டினார். அத்துடன் தாம் கடும் போக்கைக் கடைப்பிடிக்கப் போவதாக வாக்குறுதி அளித்தார்.

(தொடரும்)

### ஆறாவது பாராளுமன்றம் (பிரதிநிதிகள் சபை)

1965 மார்ச் 25 - 1970 மே 29

| பிரதமர் | எதிர்கட்சித் தலைவர் | சபாநாயகர் | சபாநாயகர் 27.09.1967 - 25.03.1970 |
|---|---|---|---|
| டட்லி சேனநாயக்க | சிறிமாவோ பண்டாரநாயக்கா | சேர் அல்பேட் எ:ப் பிரிஸ் | கொரயா ஸ்ரீகுமாரதாச சார்ள்ஸ் ஷர்லி, |
|  |  | சேர் அல்பேட் எ:ப் பீரிஸ் |  |

# வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு பி.சி.ஆர் பரிசோதனை கட்டாயம்

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை



(கொழும்பு)

**வெளிநாடுகளில் இருந்து வருகை தருவோரின் பி.சி.ஆர்.பரிசோதனை அறிக்கைகளை விமான நிலையத்திலேயே பெற்று அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.**

கொவிட்-19 தொற்றுத் தடுப்பு செயலணி மற்றும் விசேட வைத்திய நிபுணர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே அவர் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

சுகாதார அமைச்சர், சுகாதாரத்துறை பணிப்பாளர் நாயகம், முப்படைத் தளபதிகள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட தரப்பினர் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளில்இருந்து வருகை தருவோரை குடிவரவு நடைமுறைகளுக்கு முன்னதாக பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கும் வரை தனியாக ஓரிடத்தில் வைப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தவும். பரிசோதனை அறிக்கைகள் கிடைத்த பின்னர், அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தவும். பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை கிடைப்பதை விரைவுபடுத்துவதற்காக விமான நிலைய வளாகத்தில் ஆய்வு கூடமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தவிர வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோரை அந்தந்த நாடுகளிலிலேயே பி.சி.ஆர்.பரிசோதனைக்குட்படுத்தல், அது தொடர்பில் தலையீடு செய்வதற்கான இயலுமை குறித்து ஆராய்வதற்கும் இந்தக் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்களை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போதும், தனிமைப்படுத்தலின் போது ஏற்படக்கூடிய பல்வேறு சிக்கல்களை குறைத்துக்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருகை தருவோர் பி.சி.ஆர்.பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்க்கக்கூடிய வழிகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான செயன்முறைப் பரீட்சையை தனியார் துறையினர் முன்னெடுப்பதற்கான அனுமதி இரத்து

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சையை தனியார் பிரிவினர் முன்னெடுப்பதற்கான அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

குறித்த அனுமதியை இரத்துச் செய்யும் அமைச்சரவை தீர்மானத்திற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சையை தனியார் துறையினர் முன்னெடுப்பதற்கு கடந்த அரசாங்கத்தால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை இரத்து செய்து, செயன்முறைப் பரீட்சையை அரச துறையினர் மாத்திரம் மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு மோட்டார் போக்குவரத்து பரிசோதகர்கள் சங்கத்தினால் துறைசார் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைக்கு அமைய, சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சையை தனியார் பிரிவினர் மேற்கொள்வதை இரத்துச் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் பயணிகள் போக்குவரத்துத்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவால் அவற்றை இரத்துச் செய்யும் தீர்மானம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நான்கு இலட்சம் டொலர் நிதி வழங்கியது கனடா




(கொழும்பு)

இலங்கையில் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், 'சிறுவர்களுக்கும் அவசியமான உதவிகள் மற்றும் பராமரிப்பை வழங்குவதற்கு கனேடிய அரசாங்கம் 4 இலட்சம் கனேடிய டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து பெண்கள் மீதான குடும்ப வன்முறைச் சம்பவங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வன்முறைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியவாறான சேவைகளைப் பெண்கள் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகளின் குடித்தொகை நிதியம் மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் இலங்கையில் பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் உரிய பாதுகாப்பு சேவை வழங்கல்களை ஏற்படுத்துதல் என்பவற்றுக்காக ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ரிட்சு நக்ஸனிடம் இலங்கைக்கான கனேடியத்தூதுவர் டேவிட் மெகினொன் 4 இலட்சம் கனேடிய டொலர் நிதியுதவியினை வழங்கியுள்ளார். இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

"கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒட்டுமொத்த நாடும் முடக்கப்பட்டமையால் ஏற்பட்ட பொருளாதார ரீதியான அழுத்தம் ஒருபுறமிருக்க, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிறர் மேல் பழி!

இந்த உலகத்திலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசை. ஒரு ராஜாவுக்கு ஒரு வினோத ஆசை. அது என்ன? என்றால் விதவிதமான விசிறி மட்டைக்ளை வாங்கி சேகரித்து வைக்க வேண்டும் என்பதே ஆகும். இப்படி எங்கே சென்றாலும் விசிறி மட்டைகளை வாங்கி வந்து சேர்த்து வைத்திருந்தார்.

ஒருநாள் தெருவழியாக ஒருத்தன் விசிறி மட்டைகளை விற்றுக் கொண்டு சென்றுகொண்டிருந்தான். இவர் அதை பார்த்து விட்டார் சும்மா இருப்பாரா? உடனே அந்த ஆளை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார். விசிறி விற்பவனும் வந்தான்.

''உன்னிடம் விசேடமான விசிறி மட்டை ஏதாவது இருக்கிறதா...அப்படி இருந்தால் கொடு!'' என்றார்.

"அரசே என்னிடம் இருக்கும் விசிறி மட்டை எல்லாமே மிகவும் விஷேசமானதுதான். பார்ப்பதற்கு மிகவும் சாதாரணமாகத்தான் தெரியும். இருந்தாலும் இதனுடைய தரம் மிகவும் உயர்வு. அதனாலே விசிறி மட்டையின் விலை 100 ரூபாய்!" அப்படி என்றான் அந்த ஆள்.ராஜாவுக்கு ஆச்சரியம்.

"என்னப்பா இது பார்த்தால் பத்துகாசுகூட பெறாது போல இருக்கு... இதற்கு போய் 100ரூபாய் விலை சொல்கிறாயே அப்படி என்ன விஷேசம் இதிலே?" என்றார்.

"மன்னா உங்களிடம் பொய் சொல்லி நான் ஏமாற்ற முடியுமா? எனக்கு ஏது அவ்வளவு தைரியம்? இந்த விசிறி மட்டையிலே உள்ள விஷேசம் என்னவென்றால் இது நூறுவருடம் உழைக்கும். அதற்கு நான் உத்தரவாதம் கொடுக்கிறேன்!" என்றான்.

அப்படி என்றால் அந்த விசிறியை வாங்கு என்று சொன்னார். அரண்மனையிலே அதை 100ரூபாய் கொடுத்து வாங்கிவிட்டார்கள். இருந்தாலும் ராஜாவிற்கு மனதிற்குள்ளே ஒரு சந்தேகம். கொஞ்சம் யோசித்தார். அதன் பின் அந்த ஆளைப்பார்த்து இதோ பாரப்பா இன்றிலிருந்து இந்த விசிறி மட்டையை நான் உபயோகிக்கப் போகிறேன். நீ எதற்கும் ஒருவாரம் கழித்து என்னை வந்து பார்க்க வேண்டும்! என்றார். அவனும் சரி என்று ஒத்துக்கொண்டான்.

ராஜா அந்த விசிறி மட்டையை எடுத்து தினமும் விசிறிக் கொண்டு வந்தார். மூன்று நாளிலேயே அந்த விசிறி உடைய நடுக்குச்சி வெளியே வந்து விட்டது. அடுத்த மூன்று நாளிலேயே மிகுதியும் வீணாக போய் விட்டது.

"ஆஹா! ஏமாந்து போய் விட்டோமே அந்த ஆள் இனிமேல் அரண்மனைப்பக்கம் வரமாட்டான்!" என்று நினைத்தார் ராஜா. ஆனால் அந்த நபர் சொன்னபடி சரியாக ஒருவாரத்திலே திரும்பி வந்தான். ராஜாவை பார்த்தான். அவர் மிகவும் கோபமாக இவரைப்பார்த்தார். என்னப்பா என்னிடமே விளையாடுகிறாயா?

"உன்னுடைய விசிறி மட்டை 100 வருடம் உழைக்குமென்று சொன்னாயே? ஒரு வாரத்துக்குள்ளேயே ஒன்றுமில்லாமல் போய் விட்டது? ராஜாவை ஏமாற்றினால் என்ன தண்டனை தெரியுமா?" என்றார்.

"அரசே! அப்படி நினைக்காதீர்கள். நான் ஒரு தப்பும் செய்யவில்லை. மன்னருக்கு விசிறி மட்டையை உபயோகிப்பது எப்படி என்று தெரியாது போல் இருக்கு! முறையாகவும் சரியாகவும் உபயோகப்படுத்தினால் இது 100 வருடம் கண்டிப்பாக உழைக்கும்!" என்றான்.

"எனக்கென்ன விசிறவும் தெரியாது என்று சொல்கிறாயா?" என்று கேட்டார் வேகமாக... "தயவு செய்து நீங்கள் எப்படி விசிறினீர்கள் என்று சொல்லுங்கள்" என்று கேட்டான் அவன். "இப்படித்தான் விசிறிக் கொண்டேன்" என்றார். எல்லோரும் விசிறுவது போல் விசிறி மட்டையை எடுத்து விசிறிக்காட்டினார் ராஜா. அந்த ஆள் பார்த்தான். "சரிதான் இப்பொழுது எனக்கு புரிந்து விட்டது... என்ன தப்பு நடந்தது என்று! இந்த விசிறி மட்டையை உபயோகப் படுத்த வேண்டிய முறையே வேறு!" என்றான்.

எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று ஆர்வமாக கேட்டார் ராஜா. அந்த ஆள் அதை விளக்கமாக சொல்ல ஆரம்பித்தார்.

"விசிறி மட்டையை எடுத்து நம் முகத்துக்கு முன்னால் கையிலே அசையாமல் பிடிக்கவேண்டும்.நம்ம தலையை மட்டும் அப்படியும் இப்படியும் ஆட்டனும். விசிறி மட்டையை ஆட்டக்கூடாது! "நீங்கள் விசிறியை ஆட்டியிருக்கிறீர்கள் அதுதான் அது வீணாகபோய் விட்டது. அதனாலே விசிறி மேல் தப்பு இல்லை... உங்கள் மேல் தான் தப்பு! "என்றான்.

இன்றைக்கு உலகம் இப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது. நாம் செய்யும் தப்பிற்கு அடுத்தவர்கள் மேல் பழியை போடுகிறோம். தவறுகளை நியாயப்படுத்த ஆரம்பிக்கின்றோம்.

இப்படித்தான் ஒருத்தன் புதிதாக ஒரு கார் வாங்கினான். ஓடுவதற்குக் கற்றுக் கொண்டான். ஒரு புளியமரத்திலே கொண்டு போய் மோதி விட்டான்.

"என்னடா இப்படி செய்து விட்டாயே?" என்று கேட்க "என்மேல் தப்பு இல்லை. நான் நேராகத்தான் வந்து கொண்டிருந்தேன்... எல்லோரும் விலகினார்கள். இந்த புளியமரம் மட்டும் விலகவில்லை. அதனாலேதான் இப்படி ஆகிவிட்டது! "என்றான்.

உயர்ந்த குறிக்கோளைத் தேர்ந்தெடுத்து அதை நோக்கி முழு ஈடுபாட்டுடன் உழைக்கத் தொடங்குங்கள். – சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்களிப்பு வீதம் குறையாமல் இருக்க வேண்டும்

ஜனநாயகம் என்பது தேர்தல் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் நடைபெறும் தேர்தலின்போது பொதுமக்கள் வழங்குகின்ற வாக்குகளின் அடிப்படையில் அரசாங்கம் அமைகிறது.

ஆக, பொதுமக்கள் வழங்குகின்ற ஆணை என்பதை தேர்தலின்போது அவர்கள் அளிக்கின்ற வாக்குகளே தீர்மானிக்கின்றன.

எனவே ஒரு நாட்டில் உச்சமான ஜனநாயகம் நிலை பெற வேண்டுமாயின், தேர்தலின் போது ஒட்டுமொத்த வாக்காளர்களும் தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.

எனினும் நடைமுறையில் 65 சதவீதமானவர்கள் வாக்களித்தாலே அது பெரியதொரு விடயம் என்பதாக உள்ளது.

இவ்வாறு 65 சதவீதமான வாக்குகள் பதிவு செய்யப்படுகிறது எனும்போது, 35 சதவீதமான வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

இவ்வாறு 35 சதவீத வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்காமைக்கு என்ன காரணம் என்பது கண்டறியப்பட வேண்டும்.

எனினும் தேர்தல் முடிந்து விட்டால் வாக்களிக்காதவர்கள் பற்றி எந்தக் கவனமும் செலுத்தப்படுவதில்லை.

ஆக, 65 சதவீதமான மக்களே அரசாங்கத்தை அமைப்பதில், எதிர்க்கட்சியைத் தீர்மானிப்பதில் பங்கெடுக்கின்றனர்.

ஏனைய 35 சதவீதமானவர்களும் அக்கறையற்றவர்களாக அன்றி தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் மீது நம்பிக்கையற்றவர்களாக அல்லது வேறு காரணங்களுக்காக வாக்களிப்பதில் இருந்து விலகிவிடுகின்றனர்.

இவ்வாறான விலகல் ஜனநாயக ஆரோக்கியத்துக்கு ஏற்புடையதன்று.

எனவே ஒட்டுமொத்த வாக்காளர்களும் வாக்களிப்பதற்கான விழிப்புணர்வுகளும் உற்சாகப்படுத்தல்களும் தேவையாக உள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், நம் நாட்டில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற பொதுத் தேர்தலில் பொதுமக்கள் வாக்களிப்பதற்கான உற்சாகப்படுத்தல்கள் இரட்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இல்லையேல் கொரோனாத் தொற்றைச் சாட்டாக வைத்து வாக்களிப்பு என்பது மந்தமாகிவிடும்.

மிகக் குறைந்த வாக்குகள் அளிக்கப்பட்டாலும் அரசாங்கம் அமைவது நியதியாக இருப்பினும் அஃது ஏதோ சாட்டுக்கு நடந்த சடங்கு போல ஆகிவிடும்.

ஆகையால் வாக்களிப்பு வீதம் குறையாமல் பார்த்துக் கொள்வது அனைவரதும் தலையாய கடமையாகும்.

# குண்டை தரையில் வைத்து பிள்ளைகளை அணைத்தபடி வெடிக்க வைத்தார் பெண் தற்கொலைதாரி

## தடய ஆய்வு பொலிஸ் பொறுப்பதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் சங்கரில்லா ஹோட்டலில் தற் கொலை தாக்குதல் நடத்திய இப்ராஹிமின் மனைவி பாத்திமா ஜெப்ரி, தெமட்டகொட மஹவில கார்டன் வீட்டின் மேல் மாடியில் குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார் என பிரதான பொலிஸ் பரிசோதகர் அஜித் பிரியந்த பேதுரு ஆராச்சி ஜனாதிபதி ஆணைக்குழுவில் கடந்த 3ஆம் திகதி சாட்சியம் அளித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறையில், மாபிள் தரை மீது குண்டினை வைத்து அதன் அருகே அமர்ந்தவாறு தனது பிள்ளைகளையும் அணைத்துக்கொண்டு, கர்ப்பிணிப் பெண்ணான தற்கொலைக் குண்டுதாரி குண்டினை வெடிக்கச் செய்திருக்கலாம் என்று தெரிவித்தார். தற்போது டாம்வீதி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருக்கும் அவர், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றபோது கொழும்பு வடக்கு பொலிஸ் வலய ஸ்தல தடய ஆய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்தார்.

கொச்சிக்கடை தேவாலயம்மற்றும்தெமட்டகொடை - மஹவில கார்டன் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை அடுத்து அவ்விடங்களில் ஸ்தல ஆய்வினை முன்னெடுத்து சாட்சிகளை சேகரித்த பிரதான குழுவுக்கு அவரே தலைமை தாங்கிய நிலையிலேயே குறித்த பொலிஸ் பரிசோதகரிடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

இந்த சாட்சியத்தை பிரதான பொலிஸ் பரிசோதகர் அஜித் பிரியந்த பேதுரு ஆராச்சி வழங்கிய போது, தெமட்டகொட தற்கொலை குண்டுத் தாக்குதலின் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஆணைக்குழுவுக்கு கையளித்ததுடன் அவற்றை ஆணைக்குழு ஊடகங்களுக்கும் வழங்கினார். அந்த புகைப்படங்கள் இது வரை வெளியிடப்படாத புகைப்படங்களாகும்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், 'குண்டு வெடிப்பு இடம் பெற்ற வீடு இருமாடிகளைக் கொண்டிருந்தது. இந்நிலையில் முதலாவது மாடியிலுள்ள அறையொன்றிலேயே முதல் குண்டு வெடித்துள்ளது.

அந்த மாடியின் மேல் தரையில் குண்டுவெடிப்பால் பாரிய ஓட்டை ஒன்று ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக மேல் மாடி உடைந்து விழும் அளவில் இருந்தது.

அந்த பாதிப்புக்களைப் பார்க்கும் போது எனது கணிப்பின் பிரகாரம், தற்கொலை குண்டுதாரிப் பெண், மாபிள் பதிக்கப்பட்ட தரை மீது, குண்டை வைத்து நிலத்தில் அமர்ந்து, தமது பிள்ளைகளை அருகே அழைத்துக் கொண்டு இந்தக் குண்டினை வெடிக்கச் செய்திருக்க வேண்டும்.

அவ்வீட்டில் இடம்பெற்ற 2 ஆம் குண்டு வெடிப்பு சம்பவம், அந்த அறையில் இடம்பெறவில்லை. அது வேறு ஒரு இடத்தில் இடம் பெற்றுள்ளது. அந்த வெடிப்பு இடம்பெற்ற அறை, ஒருவர் மட்டும் இருக்க முடியுமான சிறிய இடமாகும்.

எவ்வாறாயினும் இந்த வெடிப்பு இடம்பெற்ற மஹவில கார்டன் வீட்டிலிருந்து உப பொலிஸ் பரிசோதகர் ரோஹண பண்டார உள்ளிட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் சடலங்களை மீட்ட போது, தற்கொலை குண்டுதாரியான பெண், அவரது பிள்ளைகள் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதறிக் கிடந்துள்ளனர்.' என மேலும் சாட்சியமளித்தார். (ஐ-4)

## அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சிவசிதம்பரத்தின் 18-ம்ஆண்டுநினைவு நிகழ்வும் முன்னாள் உப தலைவர் சி.நமசிவாயத்தின் நினைவு நிகழ்வும் இன்று 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

அதேவேளை மாலை 4 மணியளவில் சிவசிதம்பரத்தின் கரவெட்டி இல்லத்தில் அமைந்திருக்கும் அவரின் சிலைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நடைபெறும். (2-5)

# விசேட நுளம்புக்கட்டுப்பாட்டு நிகழ்வு ஜூன் மாதம் 8-10 ஆம் திகதி வரை

(கொழும்பு)

விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்வு -2020 ஜூன் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். மாநகரசபை பிரிவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன்மூலமே அதிகரித்துவரும் டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்தும் விடுபட முடியும்.

இத்தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்பு வழங்கி சுற்றுச் சூழலை துப்புரவாகப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இம்முறைடெங்குப்பெருக்கத்திற்குச் சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளுக்கு களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ரி.பாலமுரளி அறிவித்துள்ளார். (2-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** சாவகச்சேரி தபாலக வீதி, டச்சு வீதி கண்டுவில், அரசடி ஆசிரியர் வீதி, பெருங்குளம் சந்தி, 190ஆவது மைல் கல் ஏ9 வீதி, நுணாவில் வைரவர் கோவில் பிரதேசம், கல்வயல் துர்க்கை அம்மன் கோவில் சந்தி, சாவகச்சேரிபுகையிரதநிலையம், சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி வைத்தியசாலைப் பிரதேசம், சாவகச்சேரி நீதிமன்ற பிரதேசம், அரசடி, கச்சாய் வீதி, சங்கத்தானை, மீனாட்சியம்மன் கோவில், வில்லூன்றி, நாவாந்துறை, முத்தமிழ் வீதி, மீனாட்சிபுரம், பண்ணை சுற்றுவட்ட வீதி, கண்ணகிபுரம், பண்ணை சுகாதாரக் கிராமம், யாழ். சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒருபகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக்தொலைத்தொடர்புநிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கடவுளின் அவதாரம்



மகான்களிடையே சாதாரணமாக விளங்குபவர்களை விட மிக உயர்ந்தவர்களாகவும் மேன்மை வாய்ந்தவர்களாகவும் உள்ள சிறந்ததோர் ஆச்சார்யப் பிரிவு உலகில் இருந்து வந்துள்ளது. இவர்களைத் தான் நாம் “கடவுளின் அவதாரம்” என்கின்றோம்.

இத்தகைய சிறப்படைந்த இம்மேலோர்கள் ஒருவனைத் தீண்டி விட்டால் அந்த நிமிடமே ஆன்மீகச்சக்தி கிளர்ந்தெழுகிறது. அதுமட்டு மல்ல இவர்கள் தாங்கள் விரும்பிய உடனேயே பிறரிடம் தெய்வீக ஆற்றல்களை எழச் செய்கின்றனர்.

இவர்களிடமிருந்து கட்டளை வந்துவிட்டால் உடனே கயவனும் கடைப்பட்டவனும் மகான் ஆகிறார்கள். இவர்களே ஆசான்களுக்கெல்லாம் ஆசானாக இருப்பவர்கள். இறைவன் மனித வடிவில் காணப்படுவது இவர்களிடம் தான். இறைவனை இவர்கள் மூலமாக அல்லாமல் வேறு எந்த வகையிலும் நாம் காணமுடியாது. எனவே இவர்களே உண்மையில் நமது வழிபாட்டிற்கும் வணங்குதலுக்கும் உரியவர்கள்.

# மாணவர்கள் மீது கத்திக்குத்து!

## சீனாவில் பயங்கரம்



(பீஜிங்)

**சீனாவில் ஆரம்பப் பாடசாலையொன்றில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் சுமார் 39 மாணவர்களி மற்றும் பெரியவர் ஒருவரும் காயமடைந்துள்ளதாக சீனாவின் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் குவாங்சி தன்னாட்சி பிராந்தியத்தில் உள்ள சுஸோ நகரில் உள்ள ஒரு பாடசாலையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

மாணவர்கள் பொதுவாக வகுப்பிற்கு வரும் நேரத்தில் இக் கத்திக்குத்து நடந்ததாக, உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை மேற்கொண்டவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர், பாடசாலையில் பாதுகாவலராக பணிபுரியும் 50 வயது நபர் என பொலிஸார் அடையாளங் கண்டு அவரைக் கைது செய்துள்ளனர்.

இத்தாக்குதல் மேற்கொள்ளப்படுவதற்கான காரணம் எது வென தெரியாத நிலையில், இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (2-5)

# சீனா- அமெரிக்கா பயணங்களுக்குத் தடை

(வோஷிங்டன்)

சீன விமானங்களுக்கு அமெரிக்கா பயணத்தடை விதித்துள்ளது.

இதற்கமைய அமெரிக்காவிலிருந்து சீனாவிற்கும் சீனாவிலிருந்து அமெரிக்காவிற்குமான விமான சேவைகள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் தடை செய்யப்படவுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக இரு நாடுகளுக்குமிடையில் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.


அமெரிக்க ஜனாதிபதி பல்வேறு சந்தர்ப்பங்களில் சீனா மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் இருநாடுகளுக்குமிடையில் வர்த்தக யுத்தம் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (2-5-8)

## மரத்துப் போன மனிதம்

# பழத்தில் வெடிமருந்து வைத்து கர்ப்பிணி யானை கொலை

## கேரளாவில் சோகம்



(கேரளா)

கேரளாவில் அன்னாசிப் பழத்தில் வெடிமருந்துகள் வைத்து கர்ப்பிணி யானை கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் நெஞ்சை உலுக்குவதாகவுள்ளது.

கேரள மாநிலம் மலப்புரம் பகுதியில் உள்ள வெள்ளியாற்றில் கடந்த வாரம் கர்ப்பிணி யானை ஒன்று நின்ற நிலையில் இறந்து இருந்தது.

காட்டு யானை உணவு தேடி கிராமத்திற்கு வந்த நிலையில், வெடிமருந்தை மறைத்து வைத்த அன்னாசி பழத்தை உணவாக கொடுத்துள்ளனர். நம்பி வாங்கி உண்ட யானை. பழத்தை கடிக்கும் போது வெடிமருந்து வெடிக்க, அதன் வாய் மற்றும் நாக்கு பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது.குட்டியை ஈனும் நிலையில் யானை இருந்தது.

பட்டாசு வாய் மற்றும் நாக்கில் ஏற்படுத்திய படுகாயத்தால் அந்த யானை உணவு உட்கொள்ள முடியாமல் சில நாட்கள் கழித்து அந்த யானை உயிரிழந்துள்ளது.

காயத்தின் மீது ஈ உள்ளிட்ட பூச்சிகள் அண்டாமல் இருக்க, யானை ஆற்றில் நின்று தண்ணீரை வாயில் தெளித்துக் கொண்டே இருந்துள்ளது. தகவல் அறிந்த வனத்துறையினர் கர்ப்பிணி யானையை மீட்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

ஆனால். கர்ப்பிணி யானை இறந்த நிலையிலே மீட்கப்பட்டது சோகத்தை ஏற்படுத்தியது.(2-5)

# கனரக வாகனம் காலனானது ஒரே குடும்பத்தில் 9 பேர் பலி

(டில்லி)

உத்தர பிரதேசத்தில் நேற்று லொறியும் காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்தனர்.



உத்தர பிரதேச மாநிலம் பிரதாப்கர் மாவட்டம் நவாப்கஞ்ச் அருகே நேற்று லொறி ஒன்றும், காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் கார் முற்றிலும் சேதமடைந்தது. காருக்குள் இருந்தவர்களில் 2 குழந்தைகள் உள்ளிட்ட 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.

விபத்து பற்றி தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கார் நசுங்கியிருந்ததால், காஸ் கட்டர் மூலம் அதன் பாகங்களை வெட்டி எடுத்த பிறகே உடல்களை மீட்க முடிந்தது. காயமடைந்த ஒருவர் அருகில் உள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்தில் இறந்தவர்கள் ராஜஸ்தானில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் பீகார் மாநிலம் போஜ்பூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக காரில் சென்றபோது விபத்து ஏற்பட்டது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2-5)

# ரஷ்யாவை இணையுங்கள்- அமெரிக்கா ; கனடா- பிரித்தானியா கடும் எதிர்ப்பு

(வோஷிங்டன்)

ஜி-7 நாடுகள் பட்டியலில் மீண்டும் ரஷ்யா இடம்பெற வேண்டும் என்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் விருப்பத்தை கனடா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் எதிர்த்துள்ளன.



ஜி-7 மாநாட்டில் கலந்து கொள்ள முடியாத நாடுகளுக்கு கால நீடிப்பு வழங்கி, ரஷ்யாவையும் இணைத்து ஜி-7 அமைப்பை விரிவாக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில். கனடா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுடன் ரஷ்யா நல்ல உறவில் இல்லாததன் காரணமாக, இரு நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறுகையில்,

'பல ஆண்டுகளுக்கு முன்பு கிரீமியா மீது ரஷ்யா படையெடுத்ததால் ஜி-7இல் இருந்து வெளியேற்றப்பட்டது.

இருப்பினும் ரஷ்யா தொடர்ந்து சர்வதேச விதிகளை மீறிச் செயற்படுவதால். ஜி-7 அமைப்பில் இருந்து ரஷ்யா விலகியே இருக்க வேண்டும்' எனக் கூறினார்.

இது தொடர்பாக பிரதமர் போரிஸ் ஜோன்சனின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

'ரஷ்யா நடத்தும் வலிய தாக்குதல்களையும் மேற்கொள்ளும் கடுமையான நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்ளாவிட்டால், ஜி-7இல் ரஷ்யா இடம்பெறுவதை பிரித்தானியா ஆதரிக்காது. 2014ஆம் ஆண்டு கிரீமியா மீது படையெடுத்த காரணத்தால் ரஷ்யா விலக்கி வைக்கப்பட்ட பிறகும் கூட ரஷ்யாவின் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் இல்லை' எனக்கூறினார்.

இந்த ஆண்டு அமெரிக்கா நடத்தும் ஜி-7 உச்சி மாநாட்டில் கனடா, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, ஜப்பான் மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நாடுகள் இடையேயான கூட்டு முயற்சி, ஒத்துழைப்பு குறித்து இங்கு விவாதிக்கப்படவுள்ளது.

இந்தமாதம் நடைபெறவிருந்த ஜி-7 உச்சி மாநாடு, எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## மகனைத் தேடி...

குளத்தில் வசிக்கும் சின்னச்சாமி நல்லதம்பி (வயது - 71) என்ற தந்தையே நேற்று தனது வீட்டில் உள்ள மரமொன்றில் ஏறியபோது கீழே வீழ்ந்து இறந்துள்ளார்.

வவுனியாவில் வீதி அபிவிருத்தி திணைக களத்திற்கு முன்பாக 1204ஆவது நாளாக வும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். இவரது மகனை, 2008ஆம் ஆண்டு வவுனியா நீதி மன்றத்திற்கு முன்பாக வைத்து இனந்தெரி யாதோர் கடத்திச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், தொடர்ச்சியாக போராட் டத்தில் ஈடுபட்டு வந்த இவர் 1200ஆவது நாளன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப் பாட்டத்திலும். கலந்து கொண்டு காணாமல் போன உறவுகளுக்காக குரல் கொடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## சீனியின் விலை...

பகுதியினுள் சீனியின் விலை பாரியளவு அதிகரித்துள்ளதாக குறிப் பிடப்படுகின்றது.

சீனி விலையை 100 ரூபாயாக நிர்ண யிக்க கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் சீனியின் விலை திடீரென 150 ரூபாயாக அதிகரித்துள்ளதென தெரிவிக்கப் படுகின்றது.

சீனி விலை அதிகரித்தமை தொடர்பில், உள்நாட்டு வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு எவ்வித காரணத்தையும் இதுவரையில் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் யாழில் சீனியின் விலை 135 ரூபாயிற்கே விற்கப்படுவதாக யாழ்ப்பாண வர்த்தகர்கள் நேற்றுத் தெரிவித்திருந்தனர். (ம-3)

## சீமெந்தின் விலை...

இதன் விளைவாக, சீமெந்து விநியோகத் தில் ஏகபோகத்தை உருவாக்க வாய்ப்புள்ளது என்று பாவனையாளர் உரிமைகள் பாது காப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் சீமெ ந்துப் பவுடர் மற்றும் பொதியின் தரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## கெரோயினுடன்...

செய்யப்பட்டனர்.

திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதி யில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கட்டப்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த 19,20 வயதுகளை உடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் 40 மில்லிகிராம் நிறையுடைய கெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கோண் டாவில் பகுதியில் வைத்து நேற்று கைது செய் யப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 22 வயது டைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார். (ம-3,8,18)

## முகக் கவசம்...

வித்துள்ளது.

முகக் கவசம் அணியாதவர்களுக்கு பொதுப் போக்குவரத்துச் சேவையில் பயணிப் பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள் ளார்.

அத்தியாவசியமற்ற பயணங்களுக்காக பொதுச் சேவையினை பயன்படுத்த வேண் டாம் எனப் போக்குவரத்து அமைச்சர் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

திங்கட்கிழமையில் இருந்து போக்கு வரத்துச் சேவைகள் வழமைக்கு திரும்பவுள் ளன. இதன்போது சுகாதார ஆலோசனை கள் உரிய வகையில் அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்த போக்குவரத்து அமைச்சர் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமை வாக பயணிகளுக்கு அனுமதி வழங்குவது கட்டாயமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சகல பயணிகளும் முகக் கவசம் அணிய வேண்டும். முகக் கவசம் அணியாதவர் களுக்கு பொதுப் போக்குவரத்துச் சேவையில் பயணிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

பஸ் மற்றும் ரயில்வே நிலையங்களில் கை கழுவுவதற்கான வசதி ஏற்படுத்தப்பட் டுள்ளதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. சகல பஸ்களிலும் ஆசனங்களில், 50 வீத மான பயணிகளுடன் பஸ் தனது பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, பாடசாலை பஸ்கள் மற் றும் சுற்றுலா பயணங்களுக்கு பயன்படுத் தப்படும் பஸ்களை தற்காலிகமாக பயணிகள் போக்குவரத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்களை பதிவு செய்யும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படின் இந்த பஸ்களை சேவை யில் ஈடுபடுத்துவதாக அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (ம-3)

## ஊரடங்கு...

வரை தினமும் பின்னிரவு 11 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு உத் தரவு அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

இன்று ஜூன் 06 சனிக்கிழமை முதல் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊர டங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை இரவு 11.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும்.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்திற்கான அனுமதியில் மாற்றங் கள் இல்லை.

அரச, தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களை நடத்திச் செல்லும் போதும், அன்றாட இயல்பு வாழ்க்கையின் போதும் கொரோனா ஒழிப்பு சுகாதார பரிந்து ரைகளை முழுமையாக பின்பற்றுமாறு அரசு அனைத்து தரப்பினரிடமும் கேட்டுக் கொண்டுள்ளது என்றுள்ளது. (ம-3)

## பொதுத் தேர்த...

கண்டியல் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக் கையில்,

பொதுத் தேர்தலின் பின்னர் இலங்கை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த அரசியலமைப்பு ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

இலங்கை சுங்கப் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், பாதுகாப்புச் செயலா ளர் உள்ளிட்ட பதவிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் இந்த செயற்பாட்டினை ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என எதிரணியினர் கடுமையாக விமர்சித் திருந்தநோது இராணுவ மயமாக்கலுக்கான முதற்கட்ட நடவடிக்கை என்றும் குறிப்பிட் டுள்ளனர்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இராணுவமயமாக்கலின் ஊடாக மக்களின் வாக்குகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட லாம்.

எமது நாட்டில் சுயாதீன, நீதியான தேர் தல்களே அதிகமாக இடம்பெற்றிருக்கின் றன. பொதுமக்கள் கருத்துக் கணிப்பு ஒன் றும் மிக மோசமாக நடத்தப்பட்ட சந்தர்ப்ப மும் உள்ளது. அவ்வாறு இந்த தேர்தலை நடத்த முனைந்தால் நாடு மீள ஆபத்தையே சந்திக்கும். தற்போது சுயாதீன, நீதியான தேர்தலை நடத்த முடியும்.

1931ஆம் ஆண்டிலிருந்தே எமது மக்கள் தேர்தலுக்குப் பழக்கப்பட்டவர்கள். தேர்தலின் ஊடாக இலங்கையைப் போல அரசாங் கங்களை மாற்றியமைத்த வேறு நாடுகள் இல்லை. அரசியல் அதிகாரிகள் இந்த தேர்த லில் தலையீடு செய்து மாற்ற முனைவதை தடுத்தால்தான் சுயாதீன தேர்தலை எதிர் பார்க்க முடியும். அதிலும் ஒரு சந்தேகம் எழுந்துள்ளது.

தற்சமயம் இராணுவ மயப்படுத்தல் இடம் பெற்று வருவதைப் பார்க்கின்றபோது மக்கள் மத்தியில் இப்படியான சந்தேகமும் எழுந்துள் ளது. அச்சுறுத்தி பயத்தை ஏற்படுத்திவாக்குகளை சூறையாடும் முயற்சி இடம்பெறலாம் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது என்றார். (ம-3)

## கொரோனா...

பேர் தனிமைப்படுத்தி கண்காணிக்கப்பட் டதன் பின்னர் வீடுகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர். (ம-3)

## ஜனாதிபதி செய...

வகம் (CPA) தமது அதிருப்தியை வெளியிட் டுள்ளது.

பாராளுமன்றம் கலைப்பட்டு மூன்று மாதங்கள் சென்றுள்ள நிலையில் சுதந்திர மான தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை உயர்நீதிமன்றம் விசா ரணை செய்ய மறுத்துள்ளபோது இந்த செயலணிகள் அமைக்கப்பட்டமையானது நியாயமற்றது என்று மாற்றுக்கொள்கைக் கான நிறுவகம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## கொரோனா பலி...

ணிக்கை 4 இலட்சத்தை அண்மித்துள்ளது.

சீனாவில் கடந்த ஆண்டு இறுதியில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 215 நாடுகளுக்கு மேல் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்கி பலியானோர் எண்ணிக்கை 4 இலட்சத்தை அண்மித்துள் ளது.

தற்போதைய நிலைவரப்படி கொரோனா வால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 67 லட்சத்தைக் கடந் துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்குத லில் சிக்கி குண மடைந்தோர் எண் ணிக்கை 33 இலட் சத்தைத் தாண்டி யுள்ளது. கொரோ னாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 53 ஆயிரத்து 531க்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளது. (ம-3)

## ரயில்...

கள் என்பன எதிர் வரும் திங்கட் கிழமை முதல் சேவையில் ஈடு படுத்தப்படவுள் ள நிலையில் இன்று முதல் ஆசனங் களைப் பதிவு செய்ய முடியும் என்று ரயி ல்வே திணைக் களம் தெரிவித்துள் ளது.

தொடருந்துப் பய ணத்திற்கான ஆச னங்களை ஒதுக்கிக் கொள்ளும் வசதி வழமை போன்று இன்று முதல் நடை முறைப்படுத்தப்பட வுள்ளதாகவும் திணைக்களம் தெரி வித்துள்ளது.

தொடருந்துசேவை நேர அட்டவணை யில் ஏதேனும் மாற் றங்கள் மேற்கொள் ளப்படடால்அதுதொட ர்பில் கவனத்தில் கொள்ளுமாறு பயணி களுக்கு அறி விக்கப் பட்டுள்ளது. (ம-3)

## 1,043 செய...

ளாளர் வெளியிட்டுள்ளார்.

ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 31ஆம் திகதி வரையான மூன்று மாத காலப்பகுதியின் அரச செலவுகளுக்காக 1,043 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மயங்கி விழுந்து...

வடக்கைச் சேர்ந்த 39 வயதுடைய சூரிய குமார் ராதிகா என்பரே இவ்வாறு உயிரிழந்த வராவார்.

நேற்றுக் காலை அலுவலக மலசலகூடத் தில் திடீரென மயங்கி விழுந்த குறித்த பெண் அலுவலகர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலி ஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ம-3)


மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2020/06/03 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4146 |

ஆங்கில எழுத்து: A — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 9 4 3 8 2 4

தேசிய லொத்தர் சபை

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 03-06-2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2440 |

ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 22 44 63 78

தேசிய லொத்தர் சபை

සංවර්ධන වාසනාව — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி வாரம் 336 — 01.04.2020 — 03.06.2020

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| X | 19 29 47 | 03 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 53,774,028/=

தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி — ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 937 — வர்ணம் : இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி: 2020.06.03

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,708,550/-

வெற்றி இலக்கங்கள்: 01 10 23 61 — ஆங்கில எழுத்து: S

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இல.: 3321 — ஊதா — புதன்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2020.06.03

வெற்றி இலக்கங்கள்: 20 32 54 74 — ஆங்கில எழுத்து: N

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 38,756,434/-

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 03.06.2020 | 2823 | பச்சை |

| ராசி | வெற்றி இலக்கங்கள் | திங்கட் கிழமை வெற்றிப் பொதி |
|---|---|---|
| கும்பம் | 38 56 57 58 | ரூ. 2,695,924/= |

பம்பர் சான்ஸ் — விசேட இல.

ரூ.500 பரிசுக்காக 8338

ரூ.100 பரிசுக்காக 517

2020/06/08 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களுக்கும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

Web: www.dlb.lk

# இலங்கையில் இராணுவமயமாக்கல் மிகவும் தீவிரமடைந்துள்ளது

## சர்வதேச அமைப்பு வன்மையான கண்டனம்

(வாஷிங்டன்)

இலங்கையில் எதேச்சாதிகார ஆட்சிக்கு வலுவான பாதையமைத்துக் கொடுப்பதாக, இரண்டு ஜனாதிபதி செயலணிகள் இவ்வாரம் நிறுவப்பட்டுள்ளதை வாஷிங்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச அமைப்பான பேர்ள் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தேசிய பாதுகாப்பு என்ற பெயரிலும், உலகளாவிய கொள்ளை நோய்க்கான எதிர்வினைகளில் ஒன்றெனத் தெரிவித்தும் அரச நடவடிக்கைகளை இராணுவமயமாக்குவதற்கான ஜனாதிபதியின் முன்னெடுப்பின் ஒரு தீவிர விரிவாக்கமாக இப் புதிய ஜனாதிபதி செயலணிகள்அமைகின்றன.

இவ்விரு புதிய செயலணிகளும் சிங்களவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டுள்ளதாகத் தோன்றுவதோடு, அவர்களில் சிலர் போர்க்குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் எனவும் தெரிகின்றது. இது மக்கள் திரள் மீது பாரிய அட்டூழியங்களை மேற்கொண்டவர் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆதரவோடு, இலங்கை தனது இனத்துவ ஆட்சியை வலுப்படுத்துவதையே சுட்டிக்காட்டுகின்றது.

கோட்டாபய ராஜபக்சவின் புதிய ஜனாதிபதி செயலணிகள், ஏலவேயுள்ள இராணுவமயமாக்கலையும், அரச அனுசரணையுடன் தமிழர் அதிகம் வாழும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதையும் அதிகப்படுத்தி, பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தையும், உறுதியற்ற தன்மையையும் உருவாக்கும்" என்று பேர்ள் அமைப்பின் நிர்வாக இயக்குநர் டாஷா மனோரஞ்சன் தெரிவித்தார்.

இச்செயலணிகளை வழி நடத்த கோட்டாபய ராஜபக்ச போர்க்குற்றவாளிகளை நியமித்துள்ளமை, 2009 இல் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு வகைப் பொறுப்புக்கூற வேண்டும் என்ற சர்வதேச அழைப்புகளை அவர் முற்றிலும் புறக்கணிப்பதையே வலியுறுத்துகின்றது.

ஒழுக்கமான, நற்பண்பு மிக்க மற்றும் சட்டமுறைமையான சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணி ஆனது முற்றுமுழுதாக இராணுவ மற்றும் பொலிஸ்அதிகாரிகளால் ஆனது. இதில் ஐ.நா. மற்றும் ஐக்கிய அமெரிக்காவினால் போர்க் குற்றங்களைப் புரிந்தவர்கள் என நம்பத்தகுந்த முறையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் உள்ளடங்குவர்.

சமூகக் குழுக்களின் சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுப்பது மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என்பதாக இச்செயலணியின் குறிக்கோள்கள் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டுள்ளன.

இது இச்செயலணிக்குப் பரந்துபட்ட பொறுப்புகளை அளித்து, மனித உரிமை அமைப்புகள், தமிழ் குடிசார் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் பங்கேற்பாளர்கள் மீதான கட்டுப்பாட்டை வலுப்படுத்தக்கூடும் என்ற அச்சத்தை மேலும் அதிகரிக்கின்றது. பிற நாடுகளில் உள்ளோரின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான உரிமமும் இந்தச்செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது புலம்பெயர் தமிழர்கள் இலக்குவைக்கப்படுவதையும், கண்காணிக்கப்படுவதையும் அதிகரிப்பதற்கான ஒப்புதலை வழங்குகின்றது. கிழக்கு மாகாணத்தின் தொல்பொருட் பாரம்பரிய முகாமைத்துவத்துக்கான ஜனாதிபதி செயலணி, கிழக்கில் அரச நிதியைப் பயன்படுத்தி இராணுவம், அரச அதிகாரிகள் மற்றும்தொல்பொருள் திணைக்களம் ஆகியன அரங்கேற்றும் சிங்களமயமாக்கலின் விரிவான பின்னணியில் வைத்தே பார்க்கப்பட வேண்டும்.

தற்போது இந்தச் சிங்களமயமாக்கலானது, தமிழ்மற்றும்முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாகக் காணப்படும் இம்மாகாணத்தில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதன்மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. சிங்கள நியமனங்களை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இச்செயலணி, நிச்சயமாக இத்திட்டத்தின் ஓர் தொடர்ச்சியாக, தமிழ் அல்லது முஸ்லிம் வரலாற்றுத் தளங்களின் இழப்பில், சிங்கள - பௌத்த வரலாற்று இடங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதற்காகச் செயற்படும்.

இச்செயலணி, பௌத்தபிக்கு பணமுரேதிலகவன்ச தேரோ உட்பட பல பௌத்த தீவிரப்போக்குடையோரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இப் பிக்கு திருகோணமலையிலுள்ள புல்மோட்டை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களைச் சிங்கள மயப்படுத்தும் முயற்சிகளுக்காக அறியப்பட்டவர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இச்சமீபத்திய நடவடிக்கை, இலங்கையில் ஆளுகைக்கு உறுதுணையாக இருக்கும் சிங்கள - பௌத்த தேசியவாத நெறிமுறைகளை அடிப்படையாகக்கொண்டது என அவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி

# பாடசாலைகள் ஆரம்பிப்பது குறித்து அடுத்த வாரம் தீர்மானம்

## கல்வி அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் அரசு முடிவு செய்யும் என கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அமைச்சர் தெரிவித்துள்ளதாவது,

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகளுக்கு இடையில் கலந்துரையாடல் இன்னும் இடம்பெற்றுவருகின்றன. எனினும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

கல்வி அமைச்சின் குழு ஒன்று அண்மைய நாட்களில் அனைத்து மாகாணங்களுக்கும் சென்று பாடசாலைகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டதும் இவ்வாறு வழங் கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் இது குறித்து அனைத்து தனியார் மற்றும் அரச பாடசாலை அதிபர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது, அவர்களில் பலர் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களால் பாடசாலை மற்றும் பேருந்துகளில் சமூக விலகலை கடைபிடிக்க முடியாது.

சுகாதார அதிகாரிகளின் கருத்துப்படி, கொரோனா தாக்கம் இருந்தால்கூட அதன் ஆணிவேரைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். அதனால்தான் ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியாக போக்குவரத்தை ஒதுக்க முடியுமா என்பது குறித்து ஆலோசித்து வருகின்றோம். இது ஒரு சுலப மான காரியம் அல்ல. இருப்பினும் நாங்கள் அதைச் செய்ய முயற் சிக்கிறோம்.

அத்தோடு பாடசாலைகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள சில வழிகாட்டுதல்களில் ஒவ்வொரு வகுப்பறையிலும் நாற்காலிகள் இடையேயான தூரம், மாணவர்கள் அடிக்கடி கைகளை கழுவுதல் மற்றும் முகக்கவசம் அணிவதை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்.

இருப்பினும், ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் முகக்கவசம் அணிவது நடைமுறையில் இருக்காது என்றார். (ம-3)

# எதிர்வரும் திங்கள் முதல் ரயில் சேவைகள் ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடருந்து சேவைகள் வழமைக்குத் திரும்பும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

சாதாரண நேர அட்டவணையின் படி தொடருந்து சேவைகள் இடம்பெறும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் கொழும்பு பதுளை இடையேயான தேனுவாரா மெனிகே தொடருந்து சேவை மற்றும் கொழும்பு - காங்கேசன்துறை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர் கடுகதி (இன்ரர்சிற்றி) தொடருந்து சேவை ஆகிய இரண்டும் எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறாது என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் கொண்டு வரப்பட்ட கட்டுப்பாடு களையடுத்து அன்றைய தினத்திலிருந்து தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

எனினும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் கடந்த மாதம் தொடக்கம் இடம்பெற்றன.

இந்த நிலையில் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் பொது போக்குவரத்தை மீண் டும் தொடங்க அரசு முடிவு செய்துள்ள நிலையில், தொடருந்து சேவைகள் சாதாரணகால அட்டவணைப்படி இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## சிறுநீரகம் தேவை

O,B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

076 239 9874

(C-9671)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

(C-9624)


# 50 சதவீத ஆசனங்களில் பயணிகள் அமர்ந்ததும் பஸ்சேவையை ஆரம்பிக்க வேண்டும்

## போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

பேருந்து நிலையங்களில் 50 சதவீத ஆசனங்களில் பயணிகள் அமர்ந்ததும்பேருந்துகள்சேவையை ஆரம்பிக்கவேண்டும்.

அதன் மூலம் தரிப்பிடங்களில் உள்ள பயணிகள் அனைவரும் பயணிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பேருந்துகள் இருக்கைகளின் எண்ணிக்கையின்படி மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்வது கட்டாயமாகும், அதே நேரத்தில் அனைத்துப் பயணிகளும் முகக்கவசம் அணியவேண்டும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கோவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கான சுகாதார சேவை வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபையின் 5 ஆயிரத்து 300 பேருந்துகளும் மற்றும் 23 ஆயிரம் தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

எனினும் பயனுள்ள பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கு இந்த எண்ணிக்கை இன்னும் போதுமானதாக இல்லை என்று போக்குவரத்து அமைச்சுச் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)


## பதவி வெற்றிடம்

- கணக்காளர் (பெண்)
- அலுவலகச் செய்தியாளர்கள் வெளிக்களம் (ஆண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் உள்ளகம் (பெண்கள்)
- விளம்பர வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்)

### தகைமை

க.பொ.த. உயர்தரம், 25 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் 12.06.2020 க்கு முன் கிடைக்கக் கூடியவாறு தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்
வலம்புரி


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது